கலா நிலயம்

V.8. ந. 7.1.1935

JL
m211,N28KN
N35.8.3
199201

366

866

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0

புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

கலாநிலயம் :—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

17 MAY 1935

Vol. 8] 1935 ஞு ஜனவரி மீ 17 உ [No. 3

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 33

2. சூளாமணி (இரதநூபுரச் சருக்கம்)
வித்துவான்
T. P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை M.A.,B.L. 35

3. அணியிலக்கணம் (பாவிக அணி) 37

4. கம்பராமாயணம் (கார்காலப் படலம்)
T. N. சேஷாசலம் B.A., B.L. 39

5. ஒத்தெல்லோ (அங்கம் I. களம் 2.)
Shakespeare's—"Othello" 41

6. வில்லிபாரதம் (துரியோதனன்)
K. T. விஜயராகவாச்சாரியார் B. A. 43

7. காலத் தொனி
T. R. ராஜகோபால் 46

8. வர்த்தமானம் 48

## கலாநிலயம்

### இசையுடைய சீர்திருத்தம்.

இரண்டாயிரத்தைந்நூறு வருடங்களுக்கு முன் சீனதேசம் தன் பண்டையசிறப்பை யிழந்து கலகமுங் குழப்பமும் மிக உழன்றிருந்தபோது, அங்குக் கன்பூஸியஸ் என்னும் வித்தகர்தோன்றித் தம் நாடு ஒழுங்கு பெற்றுச் செம்மை யடைவதற் குரியவைகளைப்புரியத்தலைப்பட்டார். அவ்வாறுதலைப்பட்டவர், ஒரு நாட்டினது ஒழுங்கும் செம்மையுங் கைவருவதற்கு இன்னது செய்யவேண்டுமென இயம்பியிருக்கின்ற வாசகங்கள், இன்றைக்கு இங்கு முன்னேற்ற முயற்சிகள் பலபடப் பேசுவோர் மனத்தின்கண் பதியுமாயின்,வழிதுறை தெரியாமல் ஜனங்கள் அலைந்து அலைந் தவலமாய்ப்போவதின்றி மிகவிரைவில்வாழ்ந்தவர்களாவார். தேர்தலுக்கும் சட்டசபையிலும் சீர்திருத்தவும் முன்னேற்றவும் முழங்குகின்ற இச் சிறு சிறுபேச்சுக்களையெல்லாம், பேசுவதும் கேட்பதும் வழங்கி வாதிப்பதும் விட்டு,கல்வியின் அகலத்திலும் அறிவின் நுட்பத்திலும் அன்பினுழத்திலும், ஒழுக்கத்தின்உயர்விலும் தம்முடையமேன்மையைத் தெரிவித்து, இத்தகைய நன்னலன்களுக்கிடையே திரண்டெழுந்த நிரந்தரமான சிலஉண்மைகளை உற்றுரைத்திருக்கின்ற சான்றோர்தம் மொழிகளைப் போற்றிக் கொள்ளப்பயிலாதவரையில், யாராயிருப்பினும் ஒருவனுக்கானாக்கேனும், தனது குடும்பத்தினர்க்கேனும், நண்பர்களுக்கேனும், ஊரிற்கேனும் நாட்டிற்கேனும் உலகத்திற்கேனும் ஒன்றிற்கும் உதவுகின்றவனே ஒருபோதும் ஆகமாட்டான். வேறு எதனைப்பற்றி என்னசந்தேகங்கொள்ள நேர்ந்தாலும், இதுவொன்று மாத்திரம்நிச்சயம்:முன்னுரைத்த இலக்கணத்திற்கு இணங்கிய பெரியோருடன் பழகப் பயின்றிராதவன் தானும்பாழாகிப் பிறரையும்பாழாக்கவே பிறந்தவன் ஆவதன்றி அவனுக்கு வேறுளத்தொழிலுமில்லை. இச்சொல் பண்டைக்காலத்திலும் இக்காலத்திற்கு அதிகம் பொருந்தும். பண்டைக்காலங்களில், மேலோர் மொழிகள் அன்றன்றுவந்து எல்லோர்காதுகளிலும் ஒலித்துக்கொண் டிருக்காவிட்டாலும், குடிமரபும் பொதுவொழுக்கமும் அம்மேலோர் மொழிகளின்வழி பற்றியே எங்கும் பரவியிருந்தனவாதலின் ஜனங்களுக்கு அவை கேளாத்துணையாய் நின்று அவர்தம் வாழ்க்கையை அறுபதுநாழியும் நடத்திவைத்தன வென்னலாம். அம்மொழிகளின் நன்மை எல்லோர் இரத்தத்திலும் குலத்தின் அறிவாகக் கலந்திருந்தது. இதுவன்றியும், கல்லாப்புல்லோர்கள் அக்காலத்தில் கோட்டிகொண்டு இந்நாள்போல்பேசினார்கள் அல்லர். பேசினாலும் அது 'பிரசாரங்களாக'ப் பரவுவதற்கு வேண்டிய அச்சு எந்திரங்களும் வர்த்தமானப் பத்திரிகைகளும் அக்காலத்தில் இல்லை. பண்டைநாட் பெரியோர் புகன்றுள்ள உண்மைமொழிகளெல்லாம் கேளாமலும், கேட்டவர்களது நினைவில்எழாமலும், கெடும்படி, அறிவிலிகளின் புன்மொழிகளும், அரசியலின் மோசமுடைய ஆசையாற் செய்யப்படும் ஆரவாரங்களும் நிமிடத்திற்குநிமிடம், பறந்து மிகப் பரவுகின்ற இக்காலத்தில், நாமும்அழியாமல் மற்ற

வரை அழிக்கின்ற பாதகமுஞ் செய்திடாமல் தப்புவதற்கு, முன்னிங் குரைத்த குணங்கள்வாய்ந்த சான்றோர்தம் மொழியொடு பழகி அதனில் சிந்தையைச் செலுத்துவது ஒன்றே காப்பாம். இந்தக்காப்பினைக் கையிற் கொள்ளாதவர்களெல்லாம் தமக்கும் பிறர்க்கும் துரோகிகளே யாவார் என்று வருந்தி யுரைத்தவர் எமர்ஸன் ஒருவரே யல்லர். சீனதேயத்துக் கன்பூவியஸ் முதல், ஜர்மன் தேயத்துக் கிதே (Goethe) வரையில் வாழ்ந்திருந்த எத்தனை எத்தனையோ உத்தம வித்தகர் உய்விக்கவல்ல உயரியஉண்மைகளையும் அவ்வுண்மைகள் நம் உள்ளத்தில் ஊன்றுவதற்குரிய சாதனங்களையும், அச் சாதனங்களினால் சேர்கின்ற செம்மையையும் செப்பியிருக்க, அவலமாய்ப் போவதற்கே ஆள்வினை செய்யும் இம்மாக்கள் அவைகளை விடம்போல் வெறுத்து, தேர்தல் வஞ்சனைகளுக்கும் அவ்வஞ்சனையைத் தொடர்ந்து நிகழ்கின்ற அரசியல் வாதங்களுக்கும், சட்டசபைப் பேச்சுக்களுக்கும், வழக்கு வம்புகளுக்கும் அவாவிக் காலத்தை வீணாக்குவதுடன் தம் மனத்தையும் பழுதுசெய்துகொண்டு, அதனால் தாமும் வருந்திப் பிறரையும் வருத்துகின்ற இப்பரிபவத்தைக் கூறுதற்கே கூசுவார் உளர். மானுடச் சிறுமையே யன்றி வேறொன்றும் பகராத இவ் வர்த்தமானப்பத்திரிகைகளை இப்படி மெல்லுவதிற் செலவாகும் பொருளிலுங் காலத்திலும் ஆயிரத்திலொருபங்கு பெரியோர்பேசியுள்ள சொற்களை ஓதிச் சிந்திப்பதிற் செலவாகுமானால் எவ்வளவு விரைவில் எத்தனைநலம் எவ்வளவுஎளிதில் வாய்த்துவிடும் என்பதை எண்ணுந்தோறும், உயரிய நோக்கமுடையோர் உள்ளத்தில் ஒருவகைத் துயரம் சூழாமற் றீராது. "தற்கொலை யாயிற்றே இந்தப் பழக்கம்" என்று எழுபது வருடங்களுக்கு முன் எழுதிய அமெரிக்க வித்தகர் ஹென்றி தோரு என்பவர் மனமுளைந்தனர்; இக்காலத்து வர்த்தமானத்துப்பத்திரிகைகளின் ஆட்சிப்பெருக்கைக் காண்பாரேல் உளைந்தமனம் உடைந்தவரும் ஆவார் என்பதிலோ ஐயமில்லை. "உற்ற பதில் உரையாயேல், உன் உயிரை இழப்பாய்" என்றவிதிக்கடங்கி இக்காலம் ஒரு தருமன், "எல்லாவற்றிலும் ஆச்சரியமானது எது" என்று ஒருஇயக்கனால் கேட்கப்படுவானாயின், பெரியோர் மொழிகளைவிட்டு இச் சிறியோர் செய்திகளையும் சொற்களையும் ஜனங்கள் சூழ்ந்துகொள்ளுகின்றார்களே, அதனினும் அதிசயமானது வேறொன்றுமில்லை" என்னும்பதிலுரைத்தாலன்றி இத்தருமன் தன்னுயிரைக் காத்துக்கொள்ள இயலாது. அதிசயம் இதுவாயினும், இதற்குக் காரணம் உற்றுரைத்த திருவள்ளுவர்,

> சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
> சுற்றமாய்ச் சூழ்ந்து விடும்

[சிற்றினத்தவர் தம்மைப் போன்ற சிற்றினத்தவர்களோடுதான் உறவு கொண்டாடிச் சூழ்வார்களே யொழிய, பெரியோரை நாடி யடைய அஞ்சுவார்.]

என அவருக்கே யுரிய மதியின் நுட்பத்தால் நுனித்துரைத்திருக்கின்றார். "பெரியோர் சிற்றினத்தவரைச் சேர அஞ்சுவார்" என்று திருக்குறள்உரையாசிரியர் நாம் கண்ட பொருளிற்கு மாறாகப் பொருள்கொண்டிருக்கின்றாரென்பது நாம்அறிவோம். ஆயினும்இப்பொருளே ஏற்புடைத்து என்று எண்ணவுந் தகும்†. இதுவுமன்றி, பின்னரும்இத்திருவள்ளுவர், சிறியோர் இயற்கையை ஆய்ந்ததன் முடிவாக,

> சிறியா ருணர்ச்சியு ளில்லை பெரியோரைப்
> பேணிக்கொள் வேமென்னு நோக்கு

[பெரியாரை வழிபட்டு அவர் இயல்பினைத் தாம் கொள்ளுவோம் என்னும் கருத்து, சிறியோர் உணர்ச்சியில் உண்டாகாது]

என்னக் கூறுங்கால், ப்ளேடோ ஷேக்ஸ்ப்பியர் கிதே காளிதாஸன் கம்பன், திருக்கோவை பாடிய மணிவாசகர், இந்தத் திருவள்ளுவர் அனையவரை நாடாமல், வர்த்தமானப் பத்திரிகைகளையும் அது போன்ற புல்லிய வெளியீடுகளையும் சுற்றமாய்ச்சூழ்ந்துகொள்வதன் காரணம் ஐயமற வெளிப்பட்டு நிற்கின்றது. ஆம், இத்தகைய பெரியோரைப் பேணாதவர், எத்துணைப் பதவியும் பட்டமும் செல்வமும் செல்வாக்குமுடையவர்களா யிருப்பினும் சிற்றினத்தவர் சிற்றினத்தவரே என்னத் திருவள்ளுவரே கூறியபின், நம்மிற்சிலர் அதன்பொருட்டுச் சீற்றங்கொண்டு அவரை வெறுக்கப் புகுந்தால் புகலாமே யொழிய, மறக்க நினைப்பதன் மதியீனத்தை அறியாத நெஞ்சு எங்குமில்லை. ஆயினும் ஒன்று: வர்த்தமானப் பத்திரிகைகள்தாம் நம்மை இப்படிக் கெடுத்துவிட்டன என்ற ஒருபழியை அவைகளின்தலையிற் சுமத்தப் புகுவது வீண்: நாம் கெட்டிருப்பதால் அவைகளும், அவைகளைக் கரியதாக்க உதவுகின்ற செய்திகள் வாதங்கள் பிரசாரங்கள் முதலிய பிறவும் வளர்கின்றன என்ற அளவே எம்மாற் சொல்ல இயலும். "நேற்றைய பத்திரிகையையே நான் இன்னும் படிக்கவில்லை; ஷேக்ஸ்ப்பியருங் கம்பனும் காளிதாஸனும் படிப்பதற்கு எனக்கு நேரம் எங்கிருந்து கிடைக்கும்" என்று கூறியபின்னும் தம் மானம் அழியவில்லை என்று எண்ணி வாழ்கின்றவர் வீடுதோறும் இருக்கின்றார் என்றால், அப்புறம் வர்த்தமானப் பத்திரிகைகளை வழக்கிற் கழைப்பானேன். இன்னும், ஜப்பானையும் இங்கிலாந்தையும் அமரிக்காவையும் காட்டிக்காட்டி நமது நாட்டின் வர்த்தமானப்பத்திரிகையின் குறைவைநினைத்து இரங்குகின்ற, முன்னேற்றப் பிரசாரகர்களின் ஆர்வமே அதிகமும் இரங்குவதற்குரியதாய் நிற்கின்றது. ஆயினும், வர்த்தமானப்பெருக்கமே ஜனங்களைக் கெடுக்கின்றது என எண்ணுவது நீதியன்று. இது, விலைமாதர் குதிரைப் பந்தயம் அனையவைகளுக்கும் ஒக்கும். நாடியின் வேகமே சுரத்திற்குக்காரணமாம் என்று ஒருவருங்கொள்ளமாட்டார். பெரியோரைப்பேணிக்கொள்ளும் நன்மையை இழந்திருப்பதால், மனிதர் கைகள் வர்த்தமானப் பத்திரிகைகளுக்கும், கண்கள் விலைமாதர்களுக்கும், கால்கள் குதிரைப் பந்தயத்திற்கும், நாக்கு பொய் வழக்கிற்கும், அவர் இதயம் ஒன்றிற்கும் உதவாத அனைத்திற்குமிப்படித் துடிக்கின்றன.

† இதற்காதாரமாக, 1929 வருடத்திய 613-வது இதழில் வந்துள்ள கம்பராமாயணக் கட்டுரையில் இவ்விடம் ஆராயப்பட்டிருப்பது காண்க.

199201

mall,N26K.N N35.1?3



நன்று; இவ்வர்த்தமானப்பத்திரிகைகளும் அவைகளோடு எழுந்து அவைகளோடு விழுந்து அவைகளோடு அலறுகின்ற அரசியல்வாதிகள் சீர்திருத்தக்காரர் முன்னேற்றமுழக்கினர் முதலியோரும் சொல்கின்றவைகளைச் சற்றே ஒதுக்கிவைத்து, கன்பூவியஸ் கட்டுரைத்த ஒன்றினைக் கருத்துட்கொள்வோம். சீர்குலைந்திருந்த தம் சீனதேயத்தைச் செவ்விதாக்க வேண்டுமெனில், அதற்கவர் தமக்கும் முன்னிருந்த பெரியோர்தம் முறையைக்கொள்வதே உத்தமமான நெறியாம் என உணர்த்தி, அம்முறை எத்தகையது என்பதைப் பின்வருமாறு விளக்கியிருக்கின்றார்:—

"சீரும் பெருமையும் வாய்ந்த நம் முன்னையோர், உயரிய தருமங்களை விளக்கி உலகத்தில் பரவும்படி செய்ய நினைத்தபோது, தம் அரசியல்அமைப்பு நேர்மையுறும்படி ஒழுங்குபடுத்தினர்—(ஆம் ஆம், இதனைத்தான் தாங்களும் செய்ய முயல்கின்றோமென்று வர்த்தமானப்பத்திரிகையின் இனத்தவர் இதற்குள்மகிழ்ந்துவிடவேண்டா. இனிஅடுத்துவரும் வாக்கியங்கள் அம்மகிழ்ச்சி யனைத்திற்கும் தனித்தனி எமனாகவே நிற்கின்றன)—தம் அரசியல்அமைப்புக்களை ஒழுங்குபடுத்துவதன்முன் தமது குடும்பங்களை நேர்மையுடன் அவர் நடத்தினர். குடும்பத்தை நடத்தப் புகுவதன்முன் தம்மையே செம்மை செய்துகொண்டனர். தம்மைச் செம்மைசெய்துகொள்ளத் தலைப்படுவதன்முன் தம் ஆன்மாக்களைப் பரிபக்குவம் செய்துகொண்டனர் ஆன்மாவைப் பரிபக்குவம் செய்யத் துவக்குவதன்முன் தம்முடைய சிந்தனைகள் கபடமற்றவைகளாம்படி முயன்றனர். தம் சிந்தனைகள் கபடமற்றவைகளாகும்படி முயல்வதன் முன் தம் அறிவை அது எவ்வளவு தூரம் போகக்கூடுமோ அவ்வளவு தூரம் வளர்த்துக்கொண்டனர். விஷயங்களை ஆராய்ந்து அவை உள்ளபடி இருக்கின்ற உண்மையைக் காண்பதுதான் அறிவின் வளர்ச்சியாம். எப்பொருளின் மெய்ப்பொருளும் காணக்காண அறிவு முற்றவே அவர் சிந்தனைகள் கபடமற்றவைகள் ஆயின. சிந்தனைகள் கபடமற்றவைகள் ஆனதும் அவரது ஆன்மாக்கள் பரிபக்குவமடையவே அவர் தம்மைச் செம்மைசெய்துகொண்டவர் ஆனார். அவர் செவ்வியரானதும் அவரது குடும்பங்கள் நேருற நடத்தப்பட்டன; அவரது அரசியல் அமைப்புக்கள் ஒழுங்குபடுத்தப்பட்டன ஆயின. அரசியல் ஒழுங்குபடுத்தப்பட்டதும், பின் உலகம் முழுவதும் அமைதியும் இன்பமும் அடையப் பெற்றது.

உலகத்தையோ, ஒருநாட்டையோ, சனங்களையோ திருத்துவதாக இசைப்பதானால் அவ்விசைக்குரிய ஆரோஹண அவரோஹணங்கள் இவையெனக்காட்டினார் அக்கன்பூவியஸ். ஏனைய அபஸ்வரங்களைவிட்டு இதனைப் பேணிக்கொள்ளப் பயில்வோமாயின் உய்வோம்.

# சூளாமணி

4. இரதநூபுரச் சருக்கம்.

[25-வது பக்கத் தொடர்ச்சி]

[25-வது பக்கத் தொடர்ச்சி]

51. அரசன் அம் மனோவனத்தைச் சென்றணைந்தவுடன் இயற்கையும் அவனை யறிந்து வரவேற்கின்றதெனத் தற்குறிப்பேற்றமாகப் பல செய்யுள்கள்பாடுகின்றார் நம் தோலாமொழித்தேவர். அரசனை எதிர்கொள்ளும்போது, ஒருவர் பூவாலேநடைபாவாடை இடுவர்; ஒருசிலர் போற்றிசைப்பர்; வாழ்த்துப்பாடும் மங்கலமகளிர் கைகூப்பித்தொழுதுநிற்பர்; மற்றுஞ் சில மகளிர் திருச்சுண்ணந் தூவுவார். இருபுறத்தும் பூங்கவரிவீசுவர் ஒருசிலர்; ஒருபுறத்தே பொற்குடை பிடிப்பார் அங்கொரு சிலர். ஒருசிலர் அவன் திருவடியைப் புகழ்ந்து பாடுவர். ஒரு சிலர், விடுபூக்களை மிகுதியும் சொரிவர். ஒருசிலர் விசிறிகொண்டு வீசுவார். இளவேனிற்காலமும் இவ்வரசனை இவ்வாறு எதிர்கொள்கின்றது. ஈதோ ஒரு தேமாமரம், நறுமணமிக்க மலர்களைத் தூவி, மன்னவன் நடந்துசெல்ல நடைபாவாடையைப் பரப்புகின்றது. அம்மாமரம் எதிர்நின்றும் வரவேற்கிறது. இம் மரத்திலேவாழும் சிறுகுயில்கள் பாடுகின்றன. என்னபாட்டு? வாழி யரச போற்றி வாழ்க வெல்க, என்னப் போற்றிசைத்துப் பாடுவது கேளுங்கள். தாவியோடும் குதிரைகள் பூட்டியதேரிலே விரைந்துசெல்லும் மன்னர்களை வாழ்த்துவர் மகளிர். அதாவது மன்னவர்கள் உலாவவோ வேட்டைக்கோ, போர்க்கோபுறப்பட்டபோதெல்லாமவர்களுக்கு நன்மையுண்டாக வாழ்த்துவோர் மகளிரே என்றபடி, இந்த மங்கலமகளிர் போலத்தூய்மையாற் சிறந்த இவ் விளங்கொடிகளும் தம் தளிரன்ன கைகளைக் குவித்துத் தொழுது நிற்கின்றன. "மங்கலம் சொல்" என்று உவமையாகிய மகளிர்க்கு வந்தஅடையை இளங்கொடிக்குமேற்றி, வண்டுகளே வாயார வாழ்த்துகின்றன என்றேனும், அசைதலின் ஒலியே வாழ்த்தாக வாழ்த்துகின்றன என்றேனும் கொள்க.

52. தளிர்த்த கொடியாம் மகளிர் செய்கின்ற வழிபாடு ஈது. பூத்த கொடியாகின்ற பூவைமார் செய்யும் வழிபாட்டைப் பார்மின். அழகும் மணமும் மிக்க மலர்களிலிருந்துவெளிப்போந்து நறுமணங்கமழும் பூப்பொடிகளை இக்கொடிகள், தெள்ளிஎடுத்த திருப்பொற் சுண்ணமாகத் தூவுகின்றன. பலவகையாலும் வெற்றிபெற்றுக் கழலணிந்த அம்மன்னவன் மேலே, அவனும் இந்தத் திருப்பொற்சுண்ணம் இடித்த தம் பெற்றியைப் பாராட்டும்படி சொரிகின்றன. குங்கும மரமோ, தனது பூவையே கவரியாகக்கொண்டு வீசுகின்றது. என்ன புதுமை? மற்றைய கவரிவீசும்பொழுது நறுமணம் எழுவதுண்டோ. இங்கோ, இப்பூங்கவரி வீசுந்தோறும் சுற்றிலும் நறுமணம்கமழ்வதை ஆழ்ந்துஅறிமின். அரசனையில்அமர்கின்றபொழுது வெண்குடை பிடிப்பது வழக்கம். உலாவப் போகும்போதுபொற்குடை பிடிப்பதுவழக்கமாம். "இது பவனிக்குடையாதலின் பொன்னங்குடையாயிற்று" என் பர்நச்சினார்க்கினியர். கோங்கமலர்கள் குடையெனப் பூக்கின்றன. அவற்றின்நிறமோ பொன்னிறம். வானளாவ ஓங்கிநிற்கும்இம்மரங்கள் பூத்து இவ்வரசனுக்குப் பொற்குடை ஏந்திநிற்கின்றன.

கோங்கு பொற்குடை கொண்டு கவித்தன
வாங்கு வாகைவ ளைத்தன சாய்மரை
கூங்கு யிற்குல மின்னியங் கொண்டொலி
பாங்கு வண்டொடு பாடின தேனினம்.
மலர்ந்த பூஞ்சிகை வார்கொடி மங்கையர்
தலந்த லந்தொறும் ஆடினர் தாழ்ந்தனர்
கலந்த காதன்மை காட்டுநர் போலவே
அலர்ந்த வண்டளிர் மாவின மேயெலாம்

என வருகின்றயசோதரகாவியப் பாடல்களை (முதல் சருக்கம் 7-8 பா) ஒப்புநோக்குக. இவ்வாறு இயற்கையை இயையவைத்துப் பாடுவது பாவலர் மரபு.

53. பொற்குடையும் பூங்கவரியும் கண்டவுடன் புகழ்பாடவேண்டாவா! கொடிகளும் மகிழ்ந்து கூத்தாடித் தொலைவில் இருப்பார்க்கும் இவ்வூரின் இன்பப் பெருக்கைக் காட்டாநிற்கும்படி மிக உயர்ந்து ஓங்கிய தனியூரின் தலைவனான இவ்வரசன் இங்கு வருகின்றான். இதற்கேற்பஇவனுடைய தனிச்சிறப்பியல் புகளைத் திருவடியோடு இணைத்துத் திருப்புகழ் பாடுகின்றன அழகிய வண்டுகள். தோலாமொழித்தேவர் காதுகொண்டு அத் திருப்புகழைக் கேளுங்கள். கூரிய நுனைகொண்டு பொலியும் வேலேந்திய இவ்வரசன் மனம் வேட்டை முதலியவற்றிற் செல்லாது இங்கே தங்கிவிட' விடுபூக்கள் சொரிவாரைப்போலக் கிளிகள் தம்முடைய வளைந்தஅலகால் குளிர்நறும் பூக்களைக் கோதி அவன்மீது சொரிகின்றன.

54. வந்த களைப்பை ஆற்ற வேண்டாவா? தென்றலே விசிறி வீசிக் களைப்பாற்றுகின்றது. புரவலனைப் உலகைக் காப்பானையும் காத்தளிக்கும் முறையைப் பாருங்கள். திருமுடிமேல் பூக்களைச் சூடியுள்ளான். அவற்றிலே மலரும்நிலையில் நிற்பன சில; அவற்றின் மேலே இத்தென்றல் வீசுகின்றது. அவ்வின்பத்தால் மகிழ்ந்து உடற் பூத்தாற்போல மலர்கின்றனஅவை. அத்தகைய இன்பந் தருவது அத்தென்றல்; தென்றலின் பெருமையை இப்போதலர்த்தலின் வாயிலாகக் கூறிய நுட்பத்தில்நாம் திளைத்து ஆடவேண்டும். இத்தென்றற்கு இவ்வாற்றல் எங்ஙனம் வருகிறது! இத்தென்றலை ஒரு மகனுக்கிக் குரவத்தே குடைந்தாடச் செய்கிறார் தோலாமொழித்தேவர். பின்னே குளிர்நறவம் கொப்பளிக்கின்றான். தென்றலான் வண்டினங்கள் இவன் இன்பத்தைக்கண்டு ஆர்த்துஒலித்துஇன்னிசைபாடுகின்றன. அருவி நீரிற் சென்று குளிக்கின்றான். உலாப்புறம் போகின்றான். நறுமணத்தோடு மலர்ந்துள பூங்கொத்துக்களைப் பூச்செண்டுகொண்டு ஆடிச்செல்வாரைப்போலெங்கும்வீசி விளையாடி வருகின்றான். போகுமிடம் எல்லாம் பூமணம்வீசுகிறது. இவ்வாறு இன்பமாய் வருகின்ற தென்றலானே இவ்வரசனுக்கு விசிறி வீசுகின்றான். வீசுகின்ற காற்று இன்பமாய் இருக்கவேண்டுமானால், மெல்லென வீசுதல் வேண்டும். நறுமணம் கமழ்தல்வேண்டும்; வெச்சென் றின்றித் தண்ணென்று வருதலும் வேண்டும். இத்தென்றலும்போதலர அசைகின்றதொன்றே யாதலின்மெல்லென்றே வீசலாகின்றது. குரவகத்துக் குடைந்து குளிர்நறவங் கொப்பளித்துவிரைமலர்ந்த துணர்வீசி விரைநாற வருதலினால் நறுமணவடிவே அத்தென்றலின் வடிவமாகும். அருவி நீரளைந்துவருதலினால் பனிநீர்த் துளிகளைச் சிதறிக்கொண்டு தண்ணென உடலும் உள்ளமும் குளிர வீசுகின்றது.

55. இந்தப்படி இவனை இளவேனில் எதிர்கொள்கிறது. தன்னை விரும்பும் பெண்களுக்குத் தான் மிக மகிழ்ந்து இப்பொழிலின் அழகைக் காட்டுகின்றான். மின்னல்போன்ற இடைநோவ அவர்கள் ஓடியாடி விளையாடவிட்டருள்கின்றான். இவ்வாறு விளையாடுபவன்யார்? இவ்வுலகையாளும்வேந்தன்! வெற்றிவேலேந்திய கையான்! தனிச் செங்கோல் செலுத்தும் தகுதியான்! அழகிய யானைப்படையாற் சிறந்த அரசர்களும் போற்றி வணங்க விரும்பும் தனிச் செங்கோலான்-இவ்வாறு அரசப்பொருள் நிலைமையோடு இவ்வின்ப நிலையைப் பன்முறையும் ஒப்பிட்டுக்காட்டுகின்றார் தோலாமொழித் தேவர்.

56. அரசன் தன் மனைவியோடும் உரிமை காப்பவராய் வந்த மடவாரோடும் அன்போடு பேசுவதைக் கேளுங்கள். உடனிலைச் சுற்றத்தாரோடு சூழ்ந்தெண்ணியபோது பேசிய பேச்சு அறிவு ததும்புவது; இப்பேச்சோ அன்பு ததும்புவது. "பெண்களே உங்களுடைய கூந்தலின் நெறிப்பு இயற்கையணியாகப் பொலிகின்றது. அவ்வழகுக்கேற்ப இப்பொழிலின் இயற்கையழகையும் பாருங்கள். ஈதோ, இந்த இள அசோக மரம் எரிந்து மின்னும் விளக்குச்சுடர் கொண்டு தன்னைப் புனைந்து நிற்பதுபோலக் கொத்துக்கொத்தாகப் பூத்து நிற்கின்றதைப் பாருங்கள். நெற்பொரியையும் பூவையுங் கலந்து சிந்தி வாழ்த்தி வரவேற்பவரைப் போலப் புன்கமரம் பொரிபோலப் பூக்கும் நறுமணமிக்க பூக்களைச் சிந்தி மணமூட்டும். அந்த நீர்த்துறையைக் காணுங்கள். என்ன அழகு. வரிப்பாட்டுக்களை இவ்வண்டுகள் பாடி மலரில் ஊதுகின்றன. இவ்வரிப் பாட்டே தாலாட்டுப்பாட்டாக நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்கின்றாள் இவ் விளவேனிற் செல்வி. கண்டீரோ இப் புதுமையை! நும் செல்வம்போல் பொலிகின்றமை பாருங்கள்.

57. கருமுகில்போலக் கண்டோர் மனங்குளிரக் கறுத்த கூந்தலால்அழகிய பெண்களே! ஈதோ ஆழகாகத் தழைத்தோங்கியுள்ள இந்தஅசோகினைப் பாருங்கள். இத்தளிர்களில் என்ன அழகு. கார்போலப் பிறருக் குதவிச் சிவந்த நும் கைத்தலங்களைப் பார்க்கின்றன இவை. தாமும் அவற்றைப்போல் ஆக எண்ணி இத்தளிர்களை யீன்று விளங்குகின்றன. கச்சணிந்த மார்புடையீர், இக் குருக்கத்திக்கொடி இம்மரத்திற் சுற்றி நிற்பதைப் பாருங்கள். நும்சாயலோடும் இடை நொசியத் திரும்புவதுபோலத் துவண்டு வளைய எண்ணி, இவ்வழகிய குருக்கத்தி தாவித்தாவி இளங்கொடிகளைமேலும்மேலும்விட்டுவளர்வதைப்பாருங்கள். உங்கள் அழகுச் செல்வத்தைக் கண்டே இவையும் அதுபோல அழகுபெறுவது காண்க.

58. இம்மாமரத்தின் மெல்லிய தளிர்கள் உங்களுடைய மாமைநிறம் கொண்டே வளர்கின்றன. இம்மாமரம் இதோ ஏந்திநிற்கின்ற இவ்விளைய இனிய குயில்கள் ஏன் இங்கு உள்ளன? நீங்கள் இங்கு வந்து பேசுகின்ற இனிய சொற்களைக் கற்றுக்கொள்ளவேயன்றோ? குயில் மட்டுமோ? தேன் வண்டுகளும் உங்கள் கூந்தலின் நறுமணத்தை நாடிவந்து இசைப்பாட்டுப் பாடுகின்றனவே. தளிர்த்துவளரும் இந்தமெல்லிய முருக்கமரங்கள், உம்முடைய சிவந்த வாயின் அழகை நோக்கி நோக்கி அதிலேயே தோய்ந்து அவ்வடிவேபெற்று பூப்பொடுமலர்ந்து விளங்குகின்றன.



# அணியிலக்கணம்

## பாவிக அணி

[31-வது பக்கத் தொடர்ச்சி]

ஒரு காவியத்தின் பண்பு அனைத்தையுந் தன்னுள்ளே தழுவிக்கொண்டு அமைவது பாவிக அணி ஆவதால், ஏனைய அணிகளைப்போல் இது, ஒரு தனிச் செய்தியின் வருணனையில் காணக்கூடியதன்று. உவமை உருவகம் தற்குறிப்பு உயர்வுநவிற்சி ஆதிய மற்றைய எல்லாஅணிகளும் ஒருபுறமாக, இந்தப்பாவிக அணி இவ்வகையில் அவைகளினின்று வேறுபட்டு நிற்கின்றது. ஆகையால், பாவிக அணிக்கு உதாரணமாகக் காட்டுவதென்றால், இவ்வணிக்குரிய இலக்கணம் அமைந்த ஒரு காவியம்முழுவதையுங் காட்ட வேண்டுமே யல்லாமல் ஒரு தனிச்செய்யுளைக் காட்டுவதற்கில்லை. "பாவிகம் என்பது காப்பியப் பண்பே" என்பது சூத்திரம்.

ஆதலின், இப் பாவிகஅணி அமையுமாறு ஒரு காப்பியத்தில் காணப்படவேண்டிய பண்பு யாதென்பதை இனித் தெரிந்துகொள்ள முயல்வோம்.

முதலாவது, காப்பியமென்பது உயரிய சரிதையை உரைப்பதா யிருத்தல் வேண்டும். நூல் என்று எழுதப்படுவன அனைத்தும் காவியங்கள் ஆகா. மேலான விடயத்தை ஏற்றுக்கொண்டு அவ்விடயத்தின் மேன்மைக்கு ஏற்றபடி உறுப்புக்களை எல்லாம் அமைத்து இயற்றப்பெறுவதே காவியமாம். இதன்படி தமிழில், கம்பராமாயணம், வில்லி பாரதம், பெரிய புராணம், கந்த புராணம், திருவிளையாடற் புராணம், ஜீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, நளவெண்பா அனைய நூல்களும், இவைகளுக்குஇணையானஏனைய சில புராண நூல்களும், அஷ்ட பிரபந்தம் நாலாயிரப்பிரபந்தம் அனைய பிரபந்தங்களும், திருச்சிற்றம்பலக்கோவை யனைய கோவைகளும், நாலடியார் திருக்குற ளனைய நீதிநூல்களும், புறநானூறுஅகநானூறு கலித்தொகை நற்றிணை அனைய தொகைகளும், உயரிய விடயங்களை மேன்மையுறத் தம்முள் அடங்கப் பாடப்பெற்றிருப்பனவாம். இவ்வாறுஇன்றி, பெருமைக்குஞ் சிறுமைக்கும் வேற்றுமை உணராமலும், அற்பமானவைகளைப் பெருமையுடையனபோல் பரிகசித்தும்பாடப்பெற்றிருக்கின்ற நூல்களை ஒன்றுக மதித்து, இவைகளில் பாவிக அணி அமைந்திருக்கின்றனவோ என்று தேடப்புகுவது வீண் §

இப்பாவிக அணிக்கு நிலைக்களனாயிருப்பது உயரிய காவியமா யமைதல் வேண்டும் என்பது முக்கியம்.

இனி, உயரிய விடயத்தை உட்கொண்ட நூல்களையெல்லாம்பொதுவாகக் காவியம் என்றுஅழைக்கலாமாயினும், சிறப்பாகச் சில உறுப்புக்கள் பொருந்திய நூல்களையே காவியம் என்று அழைப்பது மரபாக இருக்கின்றது :—

காவியமாவது, கடவுள் வணக்கம், நாடு, நகரம், மலை, கடல், பருவம், சந்திர சூரியர்களின் உதயம், அஸ்தமனம், சந்திரோ பாலம்பனம், மன்மதோபாலம்பனம், கலியாணம், முடிகவித்தல், பொழில் விளையாட்டு, நீர்விளையாட்டு, உண்டாட்டு, மக்கட்பேறு, கலவியிற்களித்தல், புலவியிற்புலத்தல் மந்திரம், தூது, போர்ச்செலவு, போர்புரிதல், வெற்றி முதலிய இவைகளில் ஏற்பனவற்றின் வர்ணனைகளையமைத்துப் பாடப்படும் சிறந்த தலைவன் ஒருவனது கதைத்தொடர்ச்சியாம்.

மேற்காட்டிய அவ்வுறுப்புக்களில், அனைத்துமல்லாவிடினும், பெரும்பகுதி பெற்றிருக்கும் நூல்களையே சிறப்பாகக் காவியம் என்று அழைக்கின்றனர். எனின், இவ்வுறுப்பக்களின் உடைமைதான் காவியத்தின் இலக்கணம் என்னலாம். காவியத்தின் இலக்ஷணம் வேறு, அதன் பண்பு வேறு. இத்தகைய இலக்கணம்வாய்ந்த காவியத்தின் பண்பினைப்பற்றிப் பாவிக அணி அமைகின்றது.

ஆகையால், பாவிக அணியென்பது, ஒரு தனிச் செய்யுளில் காணக் கூடியது அன்று; தனி வர்ணனையில் அமைந்ததன்று; ஒரு கதையைத் தொடர்ந்து கூறிவருகிற தொடர்நிலைச்செய்யுள்களால் அமைந்த நூல் முழுவதையும் நோக்கி இவ்வணி கொள்ளப்படல் வேண்டும். ஒரு கதையைத் தொடர்ச்சியாகக் கூறுகின்ற தொடர்நிலைச் செய்யுள்களால் அமைந்த ஒரு நூலினுள் கவி தனது திறமையால் கருதிச்செய்தவோர் குணமே இப்பாவிக அணியாம் என்றபின், (அதாவது, காவியமே இவ்வணிக்கு இடமாகும் என்றபின்) கலம்பகம், மாலை, அந்தாதி, பிள்ளைத் தமிழ், தோத்திரப்பாக்கள், அனைய பிரபந்தங்களும், திருக்குறள் அனைய நீதிநூல்களும், அகநானூறு புறநானூறு முதலிய தொகைநூல்களும் இந்தப் பாவிக அணிக்கு நிலைக்களமாவதற்கில்லை.

ஆயினும், திருச்சிற்றம்பலக் கோவை போன்ற கோவை நூல்கள் இவ்வணி அமைவதற்கு ஏற்றனவாகலாமோ என்று சந்தேகங் கொள்ளக்கூடும். ஓர் உயர்ந்த தலைவனுக்கு நிகழ்கின்ற சில காதற் செய்தியைக் கூறுகிறது கோவை நூல் என்பது உண்மையே. எனினும், இதனை ஒரு கதையின் தொடர்ச்சி என்று

§ இக்கலாநிலயத்து 1929, 1930, 1931 வது வருட இதழ்களில் காணப்படும் "அண்டபுராணம்" பரிகச நூலிற்கு நல்ல உதாரணமாகும். அப்புராணத்தின் ஒருபடலமாக எழுதப்பட்டிருக்கின்ற "கொதுகின் கதி யுரைத்த படலம்" (3 வது வால்யூம் 14 வது பக்கம்) அற்பமானவைகளைப் பெருமையுடையனபோல் பரிகசித் தெழுதுவதன்நோக்கமாகிய நகைச்சுவையை நன்கு அளிக்கின்றது.

கொள்வது இயலாது. காவிய உறுப்புக்களெல்லாம் கோவையில் இருப்பதில்லை. மேலும் செய்யுள்கள் தனித்தனி துறைகளைச் செப்புகின்றனவேயல்லாமல் ஒரே சரித்திரத்தை தொடர்த்திக்கொண்டுபோகின்றன என்று எண்ணற்கு இயலாது. ஒரே தலைவனும் ஒரே தலைவியுந்தான் கோவையின் செய்யுள் தோறும் குறிக்கப்படுகின்றனரோ, அல்லது வேறுவேறோ, என்பது கூட, சந்தேகம். கோவை நூல்களில், 'தலைவன் தலைவி தோழி பாங்கன்' என்பதன்றி இப்பாத்திரங்களுக்குப் பேர்கள் கூடக் கொடுக்கப்படாதென்பது மரபு. ஆதலின், கோவை நூல் ஒரு கதையைக் கூறுகின்றதேனும், பொருளினால் ஒன்றை ஒன்று தொடர்கின்ற செய்யுளினால் அமைந்ததென்றேனும், கருதுவது அருமை. எனின், ஏனைய பிரபந்தங்கள்போல் கோவை நூல்களும் இப் பாவிக அணிக்கு இடமாகாவென்று நினைக்கவேண்டியிருக்கின்றது.

பாவிக அணிக்கு இடமா யிருக்கக்கூடிய நூலின் இலக்கணத்தைப் பார்த்தோம்—ஒரு தலைவனது சரித்தைக் கூறும் தொடர்நிலைச் செய்யுள்களாலாகிய காவியமாயிருத்தல் வேண்டும் என்பது தெரிந்தது. இனி, பாவிக அணி ஆவதற்கு என்ன என்ன பண்புகள் அந்நூலின்கண் காணப்பட வேண்டும் என்பதைச் செப்பலாம். அப்பண்புகளாவன:—

(1) நூலினுள் செப்பப்படுகின்ற எல்லாச் செய்திகளும், புலவர் எடுத்துக்கொண்டிருக்கின்ற முதல் விஷயமாகிய சரித்திரத்திற்கு உபகாரமாக இருக்க வேண்டும்.

(2) பயிலப்பெறுகின்ற அடைமொழிகள், வீணே வந்து செய்யுளை நிரப்புவதற்கு நிற்காமல், உண்மையான ஒரு பயனை உடையவைகளா யிருத்தல் வேண்டும்.

(3) வருணனைகளெல்லாம், கவி விளக்கவருகின்ற சுவைக்கு அனுகூலமாக இருக்கவேண்டும்.

(4) ஆழமும் மேன்மையும் வாய்ந்த கம்பீரமான கருத்துக்களை, கவி தன் சொற்றிறமையால் மிக எளிதாக விளக்கியிருத்தல் வேண்டும்.

இந்த நான்கு பண்புகளும் ஒரு காவியத்தினுள் காணப்படுமானால் அந்தக்காவியத்தில் பாவிக அணி அமைந்திருக்கின்றதென்று கூறலாம். இனி, இப்பண்புகளை முறையே விளக்குவோம் :—

(1) உபகாரம்:—கவி தான் எடுத்துக்கொண்ட சரித்திரத்தை அமைதியுற நிகழ்த்துவதற்கு உபயோகமானவைகளையேயன்றி, அதனையோ எவ்வகையிலும் சாராமல், முற்றிலும் அயலாயிருக்கின்ற செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் அக்காவியத்தினுள் கலக்கலாகாது என்பதைக் கூறுகின்றது இவ்விதி. இந்நிகழ்ச்சி ஒற்றுமையை ஆங்கில மரபில் Unity of action என்று கூறுவார். இராமாயணம், நளவெண்பா, சிலப்பதிகாரம் சூளாமணி போன்ற நூல்களில், கதாநாயகனது சரித்திரத்தை நடத்துவதற்கு உபகாரமாயிருக்கின்ற நிகழ்ச்சிகள் தவிர வேறு எதுவும் கூறப்பட்டு இராமையைக் கருத்துட்கொண்டால், இந்தப்பண்பு இத்தகையது என்பது விளங்கும். நளவெண்பாவில், அயோத்திமன்னனாகிய இருதுபர்ணன், தமயந்தியை மணக்க ஆசைப்பட்டு அவளது இரண்டாம் சுயம்வரத்திற்கு விரைந்த அந்நிகழ்ச்சி, நளனை மறுபடியும் குண்டினபுரத்திற்குக்கொணர்ந்துசேர்க்கஉபகாரமாயிருந்தது. மற்று, இந்தச் சரித்திரத்துடன் சம்பந்தப்படாமல் இருதுபர்ணனது அரசாட்சியைச் சார்ந்த விஷயங்கள் கூறப்பட்டிருக்குமானால், அந்நூலினுள் இந்தப்பண்பு கெட்டிருக்கும். இப்படியே ஒவ்வொரு காவியத்திலும் நிகழ்ந்திருக்கின்ற நிகழ்ச்சிகளின் ஒற்றுமையை ஆராய்ந்து, "உபகாரம்" என்னும் இந்தப் பண்பினை உணர்ந்துகொள்ளலாம்.

சேக்கிழார் பாடியிருக்கின்ற பெரியபுராணம் என்னும் அது ஒரே நூலாகக் கருதிப் பேசப்படுகின்றதாயினும், உண்மையில் அது ஒரே கதாநாயகனுடைய சரித்திரத்தைக் கூறுவதன்று. அதனில் வருகிற ஒவ்வொரு நாயனாரும் தனித்தனி தலைவர். அன்னவர்களுடைய தனித்தனி புராணங்களின் தொகுதியே இப்பெரியபுராணம் என்ற பெயரால் வழங்கிவருகின்றது. ஆதலினால், பாவிக அணிக்கு ஆதாரமாகிய நிகழ்ச்சியொற்றுமையாம் இவ் வுபகாரப்பண்பு, ஒவ்வொரு நாயனார் புராணத்திலும் தனித்தனி காணக்கூடுமேயல்லாமல், நூல் முழுவதும் ஊடுருவி வருவது இயலாது. ஆயினும், தனித்தனி சரித்திரத்தின் தன்மை நோக்கி, பெரியபுராணத்திலும் இப்பண்பு இருக்கின்றதெனக் கொள்ளல் வேண்டும்.

திருவிளையாடற் புராணத்திலும், படலந்தோறும் வேறு வேறு நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன. ஆயினும், சோமசுந்தரக் கடவுள் ஒருவரே அந்நூலிற்கு ஒரு கதாநாயகராக அமைந்திருக்கிறார் என்பது தவிர, ஒரு படலத்தில் கூறப்படுகின்ற நிகழ்ச்சி, மறுபடல நிகழ்ச்சியோடு ஒற்றுமைகொண்டு உபகாரமாக நிற்கின்றதென்று உரைப்பதற்கியலாது. இதுவன்றியும் சோமசுந்தரக்கடவுள் திருவுளங்கொண்டுநிகழ்த்திய சிலதிருவிளையாடல்களைத் தனித்தனி இந்நூல் எடுத்துரைக்கின்றதே யொழிய அக்கடவுளின் சரித்திரத்தைச் செப்புவதாகக் கொள்ளல் அருமை. ஆதலின், ஒவ்வொரு படலத்தையும் தனியாக எடுத்துக்கொண்டு, அந்தப் படலத்தினுள் கூறப்பட்டிருக்கின்ற நிகழ்ச்சிகள், அப்படலம் வரையில் அடங்கியுள்ள கதைக்கு உபகாரமாயிருக்கின்றனவோ, என்று உணர்கின்ற அளவிற்றான் பாவிக அணியின் இந்தப் பண்பு அந்த நூலினுள் அமைந்திருப்பதாகலாம்.

(2) பயனற்ற அடைமொழிகள் நூலினுள் பயிலப்பெறுமல் காப்பது, பாவிக அணிக்கு ஆதாரமாகிய மற்றையபண்பு. உரைக்கப்படுகின்ற விடயம் விளங்குவதற்கும் அதனுடைய சிறப்பு நம்முடைய உணர்விற் பதிவதற்கும் ஏற்றபடியே அடைமொழிகள் நின்றமைந்திருக்க வேண்டு மென்பது, இதனால் பெறப்பெறுகின்றது.

(3) ஒரு காவியத்துள், உவகை வீரம் சிருங்காரம் சோகம், நகை யனைய பற்பல சுவைகள் காணப்படும். இவைகளில், ஒரு சுவையைக் கவி ஓரிடத்தில் உரைக்கும்போது, அப்பொழுது நேர்கின்ற வருணனைகள்



அனைத்தும் அச்சுவையைச் சார்ந்து, அதன் வளர்ச்சிக்கு ஆதாரமா யமைதல்வேண்டுமென்பதும் பாவிக அணிக்கு இயன்ற காவியப்பண்பாகும்.

(4) ஆழமும் நுட்பமுமான உயரிய கருத்துக்கள் ஒருகாவியத்தினுள் ஆங்காங்குக்காணப்படுவதுடனே அவைதாம் மிக எளிதில் அறிந்துகொள்ளக்கூடியன போல், கவி தன் சொற்றிறமையால் தோன்றும்படி அமைத்திருத்தலும் வேண்டும்.

இப்பண்புகளை இனிச் சில உதாரணங்களின் உதவி கொண்டு விளக்குவோம்.

---

# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தா காண்டம்—9. கார்காலப் படலம்

[29-வது பக்கத் தொடர்ச்சி]

வானவன் வழங்கிய சிலேடையி னுட்டம்.

பிரிந்தாரை அருந்துயர்புரியும் ஒருபருவத்தின்வருணனையை இதுகாறும் பகர்ந்துவந்த கம்பர், இராமனது நிலைமையை இனி இயம்பத் தொடங்குகின்றார். அரசின் நினைவு இவன் அகத்துள் ஆழ்ந்திலது; சீதையே இவன் சிந்தைமுழுவதும் தழுவிக்கொள்ள,

காவி யுங்கருங் குவளையு நெய்தலுங் காயாம்
பூவை யும்பொரு வானவன் புலம்பினன் றளர்வா
னாவி யுஞ்சிறி துண்டுகொ லாமென வயிர்த்தா
னாவி யன்னமன் னுடிறத் திவையிவை செப்பும்

[காவிமலரையும் கருங்குவளை மலரையும் கருநெய்தல் மலரையும்காயாம்பூவையும் தன்நிறத்தால்ஒத்த தேவாதி தேவனான இராமபிரான், புலம்பித் தளர்ந்து, சிறிதேனும் உயிர் உண்டோ என்று சந்தேகிக்கத் தக்கவன்ஆகி, இறகு உடைய அன்னம்போன்ற சீதையைக்குறித்துப் பின்வருமாறு இந்த வார்த்தைகளைச் சொல்வானாயினன்.]

இராமன் சீதையைக் குறித்துச் சொல்வதன்முன்னரே, கம்பர் இராமனைக்குறித்து ஒன்று சொல்ல வேண்டியதுமிகவும்அவசியமாயிருக்கின்றது. எளிய மனிதர்போல் இராமபிரான்இப்படிப்புலம்பி நைவானாயின், பின்னர் அவனை நாம் யாவனென்று கொள்வோம் எனச் சிலர்அலமந்து நிற்றலும் இயலும்என்பதைநினைத்து இந்தப் புலவர்பெருமான், "புலம்புவதெல்லாம் புலம்பினாலும், பரமனே யன்றி இவன் வேறலன்" என்பதை நினைப்பூட்ட 'வானவன்' என்னவே அவனை வற்புறுத்தி அழைப்பது கருத்துட்கொள்ளவேண்டிய தொன்று. இன்னவாறே இவன் செய்கை அயிர்த்தற்கிடமாய் அமைகின்றபோதெல்லாம் கம்பர் அவனதுபரத்துவத்தை யுடனுக்குடன் பகராமல் அகல்வதில்லை. மூன்று உலகும் ஈன்றானை முன் ஈன்ற பெருமான், தனது பிரபஞ்சமேடையில் ஏறி நடிக்கும் ஒரு இராமநாடகம் இது என்று, இதனை அவனது அலகிலா விளையாட்டுக்களில் ஒன்றாக மதிக்குஞ் செவ்வியை மறப்போமாயின் விபரிதங்கள் பலபல விளைய நேரிடும். ஆதலின் இந்நாடக நினைவினைக் காக்கும்பொருட்டுக் கம்பர் இவ்விடத்தும் அவனை, 'வானவன்' என்று அழைப்பாராயினர். பொருவானவன், என்பது, 'பொருவான் அவன்' என்றும், 'பொரு ஆனவன்' என்றும் பிரிந்து பொருள்படக்கூடுமாயினும், இந்தக் கலித்துறைச் செய்யுளில் 'வானவன்' என்பது ஒரு சீராக நிற்பதால், கம்பர் யாப்பின் திறமைக்கு இணங்க, அதனை ஒரு சொல்லாகவே கொள்ளல் கவியின் கருத்துடன் நெருங்கி நடக்கும்.

அன்னதோர் வானவன், தன்னுடைய இப்பிரிவு நிலையில் பருவங்கண்டு இரங்குவதன் தகுதிநோக்கி, காளமேகத்தைப் பழிக்கப்புக்கு,

வாரேர் முலையா ளைமறைக் குநர்வா
ழூரே யறியே னுயிரோ டுழல்வேன்
நீரே யுடையா யருணின் னிலையோ
காரே யெனதா விகலக் குதியோ

[காளமேகமே, வார்க்கச்சு அணிந்த அழகிய முலைகளையுடைய சீதையை ஒளித்துவைத்திருக்கின்றவர்வாழ்கின்ற ஊரேனும் அறியாதவனாய், உயிரைச்சுமந்துதிரிகின்றேன். நீ குளிர்ந்தநீரை உடையவனாக இருந்தும் அருள்என்பது உன்னிடத்தில் இல்லையோ.]

என்றும்,

வெப்பார் நெடுமின் னினெயிற் றைவெருண்
டெப்பா லும்விசும் பினிருண் டெழுவாய்
அப்பா தகவஞ் சவரக் கரையே
யொப்பா யுயிர்கொண் டலதோ வலையோ.

[வெப்பம் மிகுந்த நீண்ட மின்னல்களாகிய பற்களையுடையாய், கறுத்துக் கோபித்து ஆகாயத்தில் எப்பக்கத்திலும் எழுகின்றாய் ஆகையால், பாதகமும் வஞ்சனையும் உடைய அந்த அரக்கரையே போன்றிருக்கின்றாய். என் உயிரைக்கவர்ந்துகொண்டல்லாமல் நீ அகலமாட்டாயோ]

என்றும், கேட்பவனாயினான். இராமனுக்குவருத்தஞ் செய்த அம்மேகங்களோ மயில்களுக்குக் களிப்பை நல்கின. அந்தக்களிப்பினால் கலாபம்விரித்தாடுகின்ற மயிலை நோக்கி,

அயிலே விழியார் விளையா ரமிழ்தின்
குயிலே மொழியார்க் கொணராய் கொடியாய்
துயிலே னுருவே னுயிர்சோர் வுணர்வாய்
மயிலே எனைநீ வலியா டுதியோ

[மயிலே, வேல்போன்ற கண்களையுடையவளும், பாற்கடலில்விளைந்த அருமையான அமிர்தத்தையும்குயிலையும் போன்ற இனிய மொழியையுடையவளும்ஆன சீதையை என்பால் கொணர்ந்து சேர்க்கமாட்டாய். கொடியவனாகிய நீ, துயில்கொள்ளாமல் தனித்திருக்கின்ற என் உயிர் சோர்வதை உணர்ந்தும், என்னை இப்பொழுது உன் வலிமையால் ஆட்டிவைக்கலாமே]

என்னநோகின்றான். தனக்குஞ்சீதைக்கும் கொடுமை செய்தவர்தம் நிறத்தை நினைப்பூட்டுவதலால் கொண்டல்கள் கொடியனவாயினவாறே, துன்பமுறுகின்ற சீதையின் சாயலைத் தம்மிற் றெரியக்காட்டி இராமன் அந்நினைவால் நலியும்படி வலியாடுதலால்மயில்களும் கொடியவே. மஞ்ஞையின் சாயலும் நடையும் இராமனை இந்நணம் இரங்கச்செய்தனவேனும், அவ்வழகினைக்கண்டு ஒகைவிளம்புவனபோல் அசைகின்ற பூங்கொடிகளைக் கண்டான் இராமன்; பின்னரும் இவன் துயர் பெருக,

மழைவா டையொடா டிவலிந் துயிர்மே
னுழைவாய் மலர்வாய் கொடியாய் கொடியே
இழைவா னுதலா ளிடைபோ லிடையே
குழைவா யெனதா விகுழைக் குதியோ

[கொடியே, இம்மழைக்காலத்து வாடைக் காற்றிற்கு இணங்க அசைந்து வலிந்து என் உயிரின்மேற் பாய்கின்றாய்; நான் வருந்துவது கண்டு மலர்ச்சிகொள்கின்றாய். ஆபரணங்களணிந்த ஒளிபொருந்திய நெற்றியையுடைய சீதையின் இடுப்பைப்போல இடையிடையே துவண்டு காட்டி, எனது ஆவி குழையும்படி செய்யலாமோ]

என்னக் குறைகூறுங்கால், இன்னவைகளுக்கு ஆற்றாமல் உடைகின்ற தனது உயிருங் குற்றம் பெரிது உடைத்து என மதித்தான்போ லவ்வுயிரை நோக்கி,

பயில்பா டகமெல் லடிபஞ் சனையார்
செயிரே துமிலா ரொடுநீ ருதியோ
வயிரா துடனே யகல்வா யலையோ
உயிரே கெடுவா யுறவோர் கிலையோ

[எனது உயிரே, பாடகம் அணிந்த மெல்லிய பாதங்கள் பஞ்சு போன்று இருப்பவளும், ஒரு குற்றமும் இல்லாதவளுமாகிய சீதையினிடந்தான் நீ செல்வாயோ; அப்படியானல் சந்தேகமில்லாமல் அப்பொழுதே நீ அவளுடனே போயிருக்கலாமே. கெடுவாய், அவளைக்காட்டிலும் என்னிடத்தில்தான் உனக்கு உறவு அதிகம் உண்டு என்பதைத் தெரிந்துகொள்ளமாட்டாயோ.]

என உயிரோடு உறவுகூறியவாங்கே, தன்னை மருண்டு நோக்கிய மானினை நோக்கி,

விழையேன் விழைவா னவைமென் மையினின்
றிழையே னுணர்வே னவையின் மையினுற்
பிழையே னுயிரோ டுபிரிந் தனரால்
உழையே யவரெவ் வுழையா ருரையாய்

[மானே, (நின் பார்வைபோன்ற) விரும்பத்தக்கவைகளையும் இப்பொழுது நான் விரும்பிப் பாராட்டும் நிலையில் இல்லை. ஆயினும் உன் உருவத்தைக்கொண்டு அல்லவோ மாரீசன் வஞ்சித்தான் என்ற காரணத்தால், நான் பெருந்தன்மையினின்று இழிந்து உனக்கு ஒரு தீங்கும் செய்யமாட்டேன். ஏனெனில் நீ ஒரு குற்றமும் செய்யவில்லை. எனது உயிரை உடன்கொண்டு சீதை பிரிந்தாளானலும், உன்பால் குற்றமின்மையைத் தெரிந்துகொள்ளுவதற்குப் போதிய உணர்வு, இன்னமும் என்னிடத்தில் இருக்கின்றது. அவள் இப்பொழுது எங்கு இருக்கின்றாளென்பதைச் சொல்வாய்.]

என்ன வினவியும், அம் மான் யாதும் விடை பகராமையால், அருகிருந்த கொன்றைச்செடியை நோக்கி, அதன் உதவியையேனும்பெறலாமென்று எண்ணினனாகி,

ஒன்றைப் பகராய் குழலுக் டையாய்
வன்றைப் புறநீள் வயிரத் தனையோ
கொன்றைக் கொடியாய் கொணர்கிற் றிலையோ
வென்றைக் குறவா கவிருந் தனையோ

[கொன்றைமரமென்னுங் கொடியவனே, ஒரு வார்த்தை சொல்லாயோ! சீதை இவ்விடத்தே இல்லையாகையால், உனது காயானது அவள் துகூந்தலுக்கு நிகராகாதநாணத்தால் இனி நீ அழியவேண்டியதில்லை. ஆயினும், முன்னே தோற்றமையால் வலியத்தைத்தவொரு நீண்டவன்மத்தை வைத்திருக்கின்றாயோ, ஆதலாற்றான் சீதையை என்பால் கொணர்ந்து தரமாட்டேன் என்கின்றனையோ. (உன்னைக் கேட்டு என்ன பயன்) நீ, என்றைக்குத்தான் என்னோடு உறவாக இருந்தனை]

என்னக் குறைகூர்ந்து நிற்பவனாகின்றான். முல்லைக் கொடிகள் அரும்புகின்றன, தம்பலப்பூச்சிகள் தரையிற் றவழ்கின்றன; இவைகளை நோக்கி,

குராவரும் பனைய கூர்வா
ளெயிற்றுவெங் குருளை நாகம்
விராவுவெங் கடுவிற் கொல்லு
மெல்லினர் முல்லை வெய்தி
னுராவருந் துயர மூட்டி
யோய்வற மலைவ தொன்றோ
இராவண கோப நிற்க
விந்திர கோப மென்னோ

[வாடாக் குறிஞ்சியின் அரும்புபோன்ற கூரியஒளியையுடைய பற்களையுடைய கொடிய பாம்புக்குட்டியினிடத்தில் பொருந்திய கொடிய விஷத்தைப்போல, மெல்லிய பூங்கொத்துக்களையுடைய இம்முல்லைக்கொடி கொடுமை செய்து என்னைக் கொல்லும். எனக்கு அரிய துயரத்தை உண்டாக்கிப் போர்செய்வது இது ஒன்றுதானே! இராவணனது கோபம்இருக்கையில் இந்திரகோபம் என்றபெயரையுடைய இந்தத் தம்பலப்பூச்சிகள் என்செய்யும்.]

என்ன ஏங்குகின்றான். இதனிற்கிடையில் வாடைக் காற்று வீசுகின்றது. அதனிற் காற்றாமல்,

ஓடைவா ணுதலி னாளை
யொளிக்கலா முபாய முன்னி
நாடிமா ரீச னாரோ
ராடக நவ்வி யானார்
வாடையாய்க் கூற்றி னாரு
முருவினை மாற்றி வந்தார்
கேடுசூழ் வார்க்கு வேண்டு
முருக்கொளக் கிடைத்த வன்றே.

[பட்டமணிந்த ஒளி பொருந்திய நெற்றியை உடைய சீதையைக்கவர்வதற்கு உபாயம்செய்ய நினைத்து அறிந்து, ஒரு பொன்மயமான மானின் உருவத்தைக் கொண்டான் மாரீசன். இப்பொழுது, எமன் தன் உருவத்தை வாடைக் காற்றாக மாற்றிவந்தான். இவ்வண்ணம், பிறருக்குக் கேடு சூழ்கின்றவர்களுக்கு, வேண்டிய உருவம் எடுத்துக்கொள்ளும் சக்தி கிடைத்திருக்கின்றதே.]

என்ன வியக்குமளவில், மேகங்கள் மின்னலை வீசின. அம்முகிலினை இராகவன் அண்ணாந்து பார்த்து,

அருவினை யரக்க ரென்ன
வந்தர மதனின் யாரும்
வெருவர முழங்கு கின்ற
மேகமே மின்னு கின்றாய்
தருவதென் றிரங்கி னாயோ
தாமரை மறந்த தையல்
உருவினைக் காட்டிக் காட்டி
யொளிக்கின்றா யொளிக்கின் றாயால்

[பொறுத்தற்கரிய தீவினைகளைச் செய்கின்ற அரக்கர்களைப்போல் ஆகாயத்தில் யாரும் அஞ்சும்படிகர்ச்சிக்கின்ற மேகமே, என் இப்படி மின்னுகின்றாய்! ஒருகால் நீ சீதையைத் தந்துவிடலாம் என்று இரக்கங்கொண்டனையோ. கொண்டும் கொடுத்துவிட மனம்வராமல், தான் வசிக்கும் தாமரையைவிட்டு மறந்துவந்த திருமகள் அனைய ஜானகியின்வடிவத்தைக் காட்டிக்காட்டி மறைக்கின்றாய், மறைக்கின்றாயே]

என்ன மிக மயங்குகின்றான். அரக்கனே போலினும் இரக்கமுள இம்மேகம், சீதையைக் கொடுத்துவிடக் கொணர்ந்து காட்டுவதும், பிறகு மனமின்றி மறைத்துப் போவதுமாய் முடிகின்ற காட்சியை மின்னலிற்



கண்ட இப்பாசுரம் கருத்தினில் இனித்து நிற்கும் கார்காலத்தில் தன்பிரிவுநிலைக்குஆற்றாமல் ஏதேனும் கழறல்வேண்டுமே என்னுமொரு கட்டளையை மேற்கொண்டு அம்மரபின்கடனைச்செலுத்துவதுபோல்வதன்றி, இதுகாறும் இராமன்இயம்பியவொன்றினும் கருதற்குரியகவிதையினுட்சி காணப்படவில்லை 'கொடியே கொடியாய்' என்றும், 'உழையேஉழையார்'என்றும், 'கொன்றைக் கொடியாய்' என்றும் "இராவண கோபம் நிற்க இந்திரகோபம்" என்றும் இராகவன் சிலசொற்களுடன் சிலேடைகள்செய்து விளையாடிக்கொண்டிருந்தனனே யல்லாமல், வேறு இவன் மனமுடன் உணர்வுஞ்செலுத்தி உயரியதுயரமொன்றும் உழன்றனன் என்னல் அருமை. ஆதலாற்றான், இது விளையாட்டே என்னும் நினைவை முன்னரே கம்பர், "வானவன்" என்னுஞ் சொல்லில் எழுப்பித்தந்தார். ஆயினும், விளையாட்டிடையினும் வினையாற்றவல்லானிவன் என்னச்சாதிக்குமாறு, இப்பாசுரம்அமைந்திருக்கின்றது. இதன்முன் சென்ற செய்யுள்களின் பொதுமைப்பழியை மீட்டித் தருவதற்கு இடையே வந்து தவழ்ந்தது இந்தச்செய்யுள் என்னலுந் தகும்.

# ஒத்தெல்லோ

## [Shakespeare's—"Othello"]

[22-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 1. களம் 2.

இடம்—வெனிஸ் நகரத்து வேறொரு வீதி.

ஒத்தெல்லோவும் இயாகோவும் தீவர்த்தி யேந்திய சில ஆட்களுடன் வருகின்றனர்.

இயாகோ:—இந்தப் போரின்தொழிலில் மனிதரை நான் மாய்த்திருக்கின்றேனாலும், கொலை ஒன்றுஞ் சூழ்ந்து செய்யாமை என் மனச்சாக்ஷியின் [1] முதற் பொருளாகக் கொள்கிறேன் நான். எனக்கு ஊதியம் அளிக்கச் சில பாதகம் போதுவதில்லை [2]. ஒன்பது அல்லது பத்துமுறை நான் அவனை மார்பின் எலும் பின்கீழ் இங்கே குத்திவிட எண்ணலானேன் [3].

ஒத்தேல்லோ:—இதுவே நல்லது. [4]

இயா:—மற்று, பிதற்றினனே அவன். உன் பெருமைக்குமாறாக இப்படி இழிவாகத்தூஷித்துக் கோபமூட்டும் மொழிகளை அவன் பேசினனே. என்க்கிருக்கும் மிகச் சிறு தெய்வ பக்தியைக்கொண்டு அவனைப் பொறுத்திருப்பது சாலக் கடினமாகிவிட்டது [5]. ஐய, ஒன்று உரைத்தருள்; உங்களுக்குக் கலியாணம் இறுக முடிந்துவிட்டதா? இதனை நிச்சயமாக வைத்துக்கொள்: இந்தக் கனவான் மிகவும் பிரியமானவன்; துரைத்தனத் தலைவர் போன்றே செல்வாக்கில் இரு மடங்கு சக்திவாய்ந்த சொல்லுடையவன் [6]. உன்னைப்பிரித்துவிடுவான் அவன் [7]. அல்லது, சட்டமானது, அதனை வற்புறுத்தத் தன் சக்தியெல்லாம் இருக்க, எத்தனை கயிறு கொடுக்குமோ அவ்வளவு நிர்ப்பந்தமும் துன்பமும் உன்மீது சுமத்துவான் [8].

ஒத்தே:—தன் வன்மத்தையெல்லாம் செலுத்தட்டும். நான் இந்தத் துரைத்தனத்திற்குச் செய்திருக்கும் சேவகம், அவனது முறைப்பாட்டை நாக்கடந்து நடந்துவிடும் [9]. இன்னும் இதுதெரிதற்கிருக்கின்றது—தற்புகழ்ச்சியும் ஒரு கௌரவமே என்று எனக்குத் தோன்றுகின்ற காலத்தில் இதனைப் பிரசுரஞ் செய்வேன் [10]—என் உயிரையும் வாழ்வையும் அரசஆதனத்தினர்களினின்றுங்கொண்டுவருகிறேன் நான் [11].

குறிப்பு:—பாலுக்குங் காவல் பூனைக்குந் தோழன் என்றபடி இவ் விரண்டகக் கள்வன் இயாகோ அங்கு, ராடரிகோவைக் கொண்டு ப்ரபான்ஷியோவைத் தூண்டி விட்டு, இங்கு ஒத்தெல்லோவினிடம் வந்து பொய்நட்புப் பாராட்டப்புகுகின்றான். இந்தக்களமும் சம்பாஷணையின் இடையே ஆரம்பிக்கின்றது.

(1) போர்க்களத்தில் புகுந்து நான் பொதுவாக எத்தனையோ மனிதரை முன் கொன்றிருக்கின்றேனாலும், ஒருவனைத் தனியாகக் குறித்துக் கொல்வதற்கோ என் மனச்சாக்ஷி இடங்கொடுக்கமாட்டேன் என்கிறது—என்பது பொருள். கொலைசூழ்ந்து செய்தல் - ஒருவனைக் கொல்லவேண்டுமென்று எண்ணிக் கொல்லுதல். மனச்சாக்ஷியின்முதற்பொருள்-என் மனச்சாக்ஷி இந்தக்கொள்கையே பொருளாகக்கொண்டு செய்யப்பட்டிருக்கிறது. பெட்டிக்கு எப்படி மரம் முதற்பொருளோ, அப்படியே இயாகோவின் மனச்சாக்ஷிக்கு, கொலை செய்யபடாது என்னும் இக்கொள்கையே முதற்பொருளாயமைந்திருக்கின்றதாம்.

(2) ஊதியம் - பயன் அல்லது இலாபம். தான் ஊதியம் அடைவதற்கு வேண்டிய பாதகங்கள் தன்னிடத்தில் இல்லையாம். "பாதகங்கள் செய்வதற்கு வேண்டிய துணிவு எனக்கு இருக்குமேயானல் எவ்வளவோ இலாபங்கள் அடைந்திருப்பேனே; அது இல்லாமையே குறை" என்கின்றான். "அவனை நான் துணிந்து கொன்றிருப்பேனாயின், அந்த நன்றிக்காக நீ எனக்கு எவ்வளவோ கைம்மாறு செய்வாய்; என் மனச்சாக்ஷிக்குக் கட்டுப்பட்டு நான் இதனை யெல்லாம் இழக்கின்றேன் பார்" என்பது பொருள். பாதகத்திற்கஞ்சுவதால்தான் தாம் முன்னுக்கு வரமாட்டாதவர்களா யிருக்கின்றார்களென்று எத்தனையோ பலர் நாள்தோறும் கூறக் கேட்கின்றோம். இன்னவர்கள் அனைவரும் இயாகோவின் இனத்தைச் சேர்ந்தவர்களே; தமக்குப் பயனுடைய பாதகம் அனைத்தையும் செய்வார். பின், செய்தும் பயனில்லை என்று நினைக்கின்ற பாதகங்களைமட்டுமே செய்யாமல் விட்டு, அவ்வாறு விட்டதற்கு மனச்சாக்ஷியே காரணமாகக் கூறுவது இவர்தம் இயல்பு.

(3) அவனை—இது ராடரிகோவைக் குறிக்கின்றதோ அல்லது ப்ரபான்ஷியோவைக் குறிக்கின்றதோ, நிச்சயமாகத் தெரியவில்லை. 'இங்கே' என்று தன் மார்பில் கை வைத்து, தான் அவனைக் குத்தநினைத்த இடத்தைக்காட்டுகின்றான். பொய்சொல்பவர், இடம் முதற்கொண்டு எவ்வளவு சிறிய அடையாளத்தையும் கூறாமல் விடமாட்டார்.

(4) இதுவே - நீ அவனைக் கொல்லாமல் விட்டதே.

(5) "எனக்கிருக்கும் சிறுதெய்வபக்தியைக்கொண்டு, மிகவும் கஷ்டப்பட்டே அவனைப் பொறுத்தேன்—என்பது பொருள். இரண்டகச் செய்கையாளர் தாம் முற்றிலும் உத்தமர்களே என்று சொல்லிக்கொள்ளமாட்டார். இவ்வளவேனும் இருக்கின்றதே என்று ஒத்தெல்லோ நம்பும்படி, இயாகோ தனக்குச் சிறிதே தெய்வபக்தி யிருக்கின்றதென்று செப்புகின்றான். முழுவதும் தூய்மையன் என்று தன்னைச் சொல்லிக்கொள்வானானல் தன் கபடம் மிக விரைவில் வெளிப்பட்டுவிடும் என்பதை அறியவல்ல சூழ்ச்சியுடையவன். மற்றெல்லா[illegible]போலஇரண்டகத்திலும் மிதமாகவே இ[illegible]. (இரண்டகம் - hypocrisy.)

M311,N31CN
N35.8.3
199201

என் தகுதியும்,நான் எய்தியிருக்கும்இந்தப்பெருமை வாய்ந்த பேற்றினுக்கு இணையேயென வணங்காமற் பேச இயலும் [12]. மற்று, இதனை நீ அறிந்துகொள். இயாகோ, மெல்லியல் டெஸ்டிமோனவை நான் காதலிக்கின்றேன் என்பதா லல்லாமல்,கடலுக்கே ஈடாகவும், வீடில்லா என்விடுதலை நிலைமையை எல்லைக்குங் கட்டுக்கும் உள்ளே புகுத்தமாட்டேன் [13] — பார், என்ன அங்கே விளக்குக்கள் வருகின்றன?

இயா:—கிளப்பனுற்ற தந்தையும் அவன் நண்பர்களும் ஆவார் அவர். நீ உள்ளே போதல் நலம்.

ஒத்தே:—மாட்டேன், நான் காணப்படுதலே வேண்டும். என் தகுதியும், என் பதவியும் என் சுத்தமான ஆன்மாவும், என்னைச் செவ்விதின் தெரியப் படுத்தும் [14]. அவர்கள் தானே அது?

இயா:—அட, ஜேனஸ்ஸே [15]. அல்ல என்று நினைக்கின்றேன்.

[காஸ்ஸியோவும், இராணுவ உத்தியோகஸ்தர் சிலரும் தீவர்த்திகளுடன் வருகின்றனர்]

ஒத்தே:— துரைத்தனத் தலைவரின் ஆட்களும், எனது அடுத்த அதிகாரியும். இவ்விரவின் நன்மையெல்லாம் நுமக்கு ஆகுக, நண்பர்காள்!

காஸ்ஸியோ:—தலைவ, துரைத்தனத்தலைவர் தம் வந்தனத்தை உனக்குச் செலுத்தி, இந்தக்கணமே, நின் அதிவேகவேக வரவினை வேண்டுகின்றார்.

ஒத்தே:—செய்தி யாதென்று நினைக்கின்றாய் நீ?

காஸ்ஸி:- ஏதோ ஸைப்பிரஸ்ஸிலிருந்து[16] என்று ஊகிக்கின்றேன். அவசரமான காரியம் அது. நம் கப்பற்படை இவ்விரவில் ஒருவர்பின் ஒருவராய்த் தூதர்கள் பன்னிருவரைத் தொடர்ந்து அனுப்பியிருக்கின்றது. செனட்சபை அங்கத்தினர்பலர் எழுப்பப்பட்டு இதன் முன்னரே துரைத்தனத் தலைவர் மனையில் சந்தித்திருக்கின்றனர். உன்னைவரவழைக்க விரைந்து அனுப்பினர். உன் விடுதியில் நீகாணப்படாமையால், உன்னைத்தேடிப் பிடிக்கும்படி மூன்றுகூட்டங்களைத் தனித்தனி போக்கியுளர்.

ஒத்தே:—உனக்கு நான் தென்பட்டது நல்லதாயிற்று. இங்கு இவ்வீட்டில் ஒரு வார்த்தை கொடுத்துவிட்டு உன்னுடன் வருகின்றேன் [17].

(ஒத்தெல்லோ உள்ளே போகின்றான்.)

காஸ்ஸி:— பதாகையாள, யாது செய்கின்றான் இங்கே இவன்?

இயா:-கலியாணம் செய்துகொண்டிருக்கின்றான்.

காஸ்ஸி:—யாரை?

[ஒத்தெல்லோ திரும்பி வருகின்றான்.]

இயா:—யாரென்றால்[18] —வா, தலைவ, போகின்றாயோ?

ஒத்தே:—உன்னுடன் கொண்டுசெல்[19].

காஸ்ஸி:—உன்னைத் தேட இன்னொரு கூட்டம் இதோ வருகின்றது.

இயா:—இது ப்ரபான்ஷியோ—தலைவ, மதியையிழக்காதே[20]. கெடுதி புரிவதற்கே கருதி வருகின்றான் அவன்.

(6) கனவான் - ப்ரபான்ஷியோ. நகரத்தலைவர் -பிரதான அதிகாரி,அவருக்கு நிகரான செல்வாக்குடையவன் ப்ரபான்ஷியோ—என்கின்றான்.

(7) பிரித்துவிடுவான் — டெஸ்டிமோனவைவிட்டுப் பிரித்துவிடுவா னென்றாவது, அல்லது, உத்தியோகத்திலிருந்து தள்ளிவிடுவான் என்றாவது கொள்ளலாம்.

(8) கயிறு என்பது இங்குப் படகைக் கரையில் கட்டி வைக்கின்றகயிறு. அக்கயிற்றின் நீளம் இடங்கொடுக்கும் வரையில் படகு நீரில் செல்வதுபோல் - சட்டம் இடங்கொடுக்கின்ற எல்லைவரையில் உன்மீது செலுத்தி, தன் முழுச் சக்தியையுங்கொண்டு தண்டனையை நடத்தி நிறைவேற்றுவான்.

(9) நான் இந்தத் துரைத்தனத்திற்குகாகச்செய்திருக்கும் சேவகத்தால் விளைந்துள பலன்களைக் கருதுங்கால், அவன் முறைப்பாடுகளை ஏற்றுக்கொண்டு என்னைத் தண்டிக்கமாட்டார்—என்பது பொருள். ப்ரபான்ஷியோ எனக்கு விரோதமாக முறையிடுவதற்கு எதிராக நான் செய்திருக்கும் சேவகமே என் சார்புபேசி, அம்முறையீட்டை வென்றுவிடும், என்னப்பொருள்படும்படி, "நாக் கடந்து நடந்துவிடும்" என்பது நிற்கின்றது.

(10) நான் மன்னவர் மரபைச் சேர்ந்தவன் என்பதை இகாறும் ஒருவரும் அறியார். தற்புகழ்ச்சி செய்துகொள்வது கௌரவம் ஆகாதென்றே கருதியிருக்கின்றேனாதலால் நானும் அதனைவெளியிடவில்லை—என்பதுபொருள்.

(11) என் முன்னையோர் அரச ஆதனத்தில் அமர்ந்தவர் (அதாவது அரசர்) என்பது பொருள்.

(12) பெருமை வாய்ந்த பேறு - டெஸ்டிமோனவின் காதலைப் பெற்ற பேறு. தகுதி...பேசும்- என் குலத்தின் சிறப்பு ஒருபுறம் இருக்க, எனக்கே உள்ள தகுதியினால் நான் அவளுக்கு மணாளனாகத்தக்கவன் என்று கூசாமல் கூறவல்லேன் - என்பது பொருள்.

(13) டெஸ்டிமோனவின்பால் நான் கொண்ட காதலால் அவளை மணக்கின்றேனே யொழிய, இதனால் என் குலம் நிலைமை முதலியவை உயர்வதற்கு ஓர் உபாயமாக நான் அவளைக் கொள்ளவில்லை—என்பது கருத்து. வீடு இல்லா என் விடுதலை நிலமை - ஸம்ஸாரப் பொறுப்புக்கள் இல்லாமல் சுயேச்சையாக இருக்கிற நிலைமை. சமுத்திரத்திலுள்ள இரத்தினம் முத்து அனைய எல்லாச் செல்வங்களையும் ஈடாகக் கொடுத்தாலும், நான் மனைவாழ்க்கையின்நிர்ப்பந்தங்களுக்குள்ளாகச்சம்மதிக்கமாட்டேன். அவள்பால் வைத்துள்ள காதலின்மிகுதியினாலேயே இந்த நிர்ப்பந்தங்களையும் ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்கிறேன்.

(14) என் தகுதியும் பதவியும் தூய்மையும் என் செம்மைக்குச் சான்றாக இருக்கும்போது நான் ஒளிந்து கொள்வானேன் - என்பது பொருள்.

(15) ஜேனஸ், என்பது உரோமரது தெய்வங்களில் ஒன்று. இதற்கு இருப்பது ஒரு தலை யானாலும், அத்தலையின் இருபுறமும் முகங்கள் உண்டு. நாம், 'அடெ ராமா', 'அடெ சிவனே' என்று கூறி வியப்பைத் தெரிவிப்பது போலவே, இயாகோ, 'அட ஜேனஸ்ஸே' என்கின்றான். உரோமர் கடவுளர்கள் வேறு இருக்கவும், ஒத்தெல்லோவுக்கு நண்பன்போல் இங்கொருமுகமும்,பகைவன்போல் அங்கொருமுகமும் காட்டுகின்ற இந்த இரண்டகன்வாயில் இருமுகக் கடவுளின் பெயரே வந்ததும் தக்கதாயிற்று.

(16) செய்தி வந்திருக்கின்றது...,என முடித்துக் கொள்க. ஸைப்பிரஸ்—உரோமர் யுத்தஞ்செய்யப் போயிருக்கின்ற இடம்.

(17) ஒத்தெல்லோ, டெஸ்டிமோனவைத் தன் விடுதிக்கு அழைத்துக்கொண்டு போகாமல், வேறோர் மனையில் வைத்திருத்தல் வேண்டும். உட்சென்று அவளிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வருகிறான். இந்த வீட்டின் பேர்தான் 'ஸாஜிட்டரி' போலும் என்று, முன் இயாகோ ராடரிகோவிற்குச் சொன்னதிலிருந்து ஊகிக்கலாம்.

(18) முடிப்பதற்குள்ளே ஒத்தெல்லோ திரும்பி வந்து விட்டானாதலால், இயாகோவும் நிறுத்திவிட்டான்.

(19) உன்னுடன் வருகின்றேன் - என்பது பொருள்.

(20) மதியற்றதுணிவினால் இவனுக்குத்தென்படாதே நான் சொல்வதைக் கேள், ஒளிந்துகொள்.



# வில்லி பாரதம்

## இராசராசன்—துரியோதனன்

[27-வது பக்கத் தொடர்ச்சி]

இவ்வாறு, கண்ணன்வெறுப்பையும் அமரர்பழிப்பையுந்தான்கருதாத தனித்துணிவைச் சுயோதனன் கழறியதும், கண்ணன் இவ்வநீதியை எடுத்துக் காட்டிச் சபையோரிடம்முறையிடவே, வீடுமன் விதுரன் திருதராட்டிரன் உள்ளிட்டோர் அரசனுக்குநன்மதி கூறியதாக வடமொழி பாரதத்தில் கூறப்பட்டிருக்கிறது.அதுவும்,திருதராட்டிரன் கண்ணனது உரையை ஏற்றுக்கொண்டு,'என்மகன் அறிவுறும் வண்ணம் நீ உரைத்தருள்' என்று கூறியதாகச் சொல்லியிருப்பது சுவையாகவே உளது. எனினும் இவ்வாறு தன் சபையினோர் தனதுசெயலை வெறுத்துக் கூறுவதும், அதனைக் கண்டுகண்ணன்மகிழ்ந்து பெருமிதத்துடன் சொற்பொழிவாற்றுவதும், அத்துணைக் கொடியவர் இருந்த அச்சபையில் பழியெல்லாம் தன்மீது எழுவதும் ஆகிய ஒருநிலைமைக்குச்சுயோதனன் இடங்கொடுப்பதை அவனது வணங்காமுடித் தன்மையுடனும், ஏதேச்சாதிகாரத்தினுடனும் சேர்த்து எண்ணுவதற்கில்லை. தனது தீய எண்ணங்களை வெளியிடாமல், அதற்கொத்தாற்போல் யோசனைகள் கூறும் பொறுப்பினைத் தனது சபையோரிடத்தே சுமத்தும் சுயோதனன், தான் கொடியவனாகவும் மற்றவர்களை நல்லோராகவும் தோன்றவிடுவானோ என்றே நாம் ஐயிர்க்கலாம். ஆதலின் நமது பாரதத்தில் சுயோதனன் அவ்வாறு நிகழாவண்ணம் தன் சபையோர்களை ஆள்வதாய் அமைந்த இந்தப்பகுதி சால இலக்கியச்சிறப்பு வாய்ந்தது ஆகும். அதுவுமல்லாமல், உலூகன் தூது வந்தபோது, அரசனுக்கு உரைக்கவேண்டிய நியாயமனைத்தையும் எடுத்துக் கூறினாலும், அவன் துணிவு மாற்றுதற் கரிதென்பதைக் கண்டாயிற்று. ஆதலின், இன்று கண்ணபிரான் வந்தபோது, அவ்வாறு நெறிமுறைகள் கூறுவது அரசனது எண்ணத்தை மாற்றுதலும் அல்லாமல், அவர்கள் கூறிய சொல் ஏதேனுமொன்றைக் கொண்டு மகா தந்திரியாகிய கண்ணன் அவர்களை எவ்வகையிலேயாயினும் கட்டுப்படுத்தலாமென்றும் அஞ்சியே அவர்கள் வாளாவிருந்தனர். மேலும், முதல்நாள் தொல்லை நாயகனை வரவேற்று அவரைத்தன்வயமாக்க நினைத்தஎண்ணம் நிறைவேறவில்லை யாதலின், அவரை வலியப் பகைகொள்ளக் கருதவேண்டியதேயொழிய அவரிடம் ஒன்றும் எதிர்பார்ப்பதற்கில்லை. ஆதலின் அவர்வரவும் வேண்டற்பாலதன்று. தனது சினத்தினையும், துணிவையும் கண்டு அவர் சபையை விட்டுச் சடுதியில் வெளியேறுவாரென்று நினைத்தே, இவ்விடையனை எதிர்கொண்டால் உங்களூர் தீவலம்செய்ய அடர்ப்பேன், என்று சபையோர்க்குச் சாஸனமிட்டு, அளவற்ற சினமும் செருக்கும், துணிவும் சார்த்திக்கொண்டு இருக்கையில் அமர்ந்திருக்கின்றான் இராசராசன். கண்ணனை எதிர்கொள்ளும் அளவில் அச்சாஸனத்தைச் சிறிது புறக்கணித்தனரேனும், மற்றைப்படி கண்ணனுடன் உறவுகொண்டாடும் சிநேகபாவத்தையுங்காட்டி அரசனது ஆக்கினைக்கு விரோதமாக அந்தச் சபையோர் போகத் துணியவில்லை. அதனால் அவர்கள் வாளாவிருப்பவும், ஏதேனுமொன்று தன் பக்கலில் அன்னவர்களைப் பேசும்படி செய்யவதற்கு எவ்வளவு தாழ்மையாகவும் நெறியாகவும்போகக்கூடுமோ அவ்வளவும் ஆற்றுகின்றார் கண்ணன். ஆயினும், சுயோதனனது சபையோர் இத்துணை இறுக அவனிடம் பிணைப்புண் டிருக்கின்றனராதலின், அவ்வமைதியைக்கலக்கக் கண்ணன் செய்த முயற்சிகளெல்லாம் நீர்கிழிய வெய்த வாளிபோல் மறைந்தன. தொடர்பில்லாமல் ஏதேனுமொன்று வாய்வந்தன கூறும் கன்னனும் இப்பொழுது சபையின் போக்கறிந்து தனது செம்மதியை விலாசப்படுத்தாதிருந்தது நோக்கத் தக்கது. அதன்மேற் கண்ணன் தன் தூதினைத் தொடர்ந்து சொல்கின்றார்:—

கார்வ ழங்குரு மெனச்சி னத்தினொடு
கண்ணிலான் மதலை கழறவும்
பார்வ ழங்கினை வில்லையே லவனி
பாதி யாயினும் வழங்குவாய்
தார்வ ழங்குதட மார்ப வென்னவது
தானு மன்னவன் மறுக்கவைஂ
தூர்வ ழங்குகென வுற்றி ரந்தனனிவ்
வுலகெலா முதவு முந்தியான்.

என்று கண்ணபிரான் கூறியவுடன் துரியோதனனும் தனது குரோதம் கோபம் அநியாயம் யாவும் வெளிப்பட எதிர் விளம்புகின்றான்.'தார்வழங்குதடமார்ப' என்றஎம்பிரான்தன்னை அழைத்ததற்குப்பதிலாகத் தானும் 'மாடளிக்குல நெருங்குபைந் துளபமாலையாய்' என்று எதிரழைக்குமாற்றால் ஏதேனுமொரு மறுமொழி உடனுக்குடன் கூறிவிட்டால் பதில் சரியாய்ப் போய்விட்டதென்ன நினைத்து,

மாட ளிக்குல நெருங்குபைந் துளப
மாலையாய் மகர வேலைசூழ்
நாட ளித்திட வுமைந்தபே ருடைய
நகரளித் திடவும் வேண்டுமோ
காட ளிக்கவ தனிடைத் திரிந்துறை
கரந்து போயினர்கள் காணவோர்
வீட ளிக்கினும் வெறுப்ப ரோவிதனை
விடுகவென் றெதிர்வி ளம்பினன்.

தனது அக்கிரமத்தைப் பெருமையாகச் சொல்லிக் கொள்வதில் துரியோதனனுக்குநிகரொருத்தர் யாருமில்லை யென்பதை இவ்விடத்தில் போல், இப் பாரத முழுதும் பல விடங்களிலும் காணலாம். கண்ணன் புல்லிய தொன்று பேசுவான் போலும், தான் நியாயமே பேசுகின்றான் போலும் 'இதனை நீ விடுக' என்றான். இவ்வண்ணமே, கடோற்கசன் தூது சென்றபோது, தான் அபிமனைப் பல சூதுகொண்டு மாய்த்த பெருமையை,

கயத்திரவி வீழ்வதன்முன் கையறுதன்
புதல்வனைப்போல் களத்தின் மாளச்
சயத்திரதன் கொடுங்கணையால் தான்படுதல்
உறுதியெனச் சாற்று வாயே

என்று கூறுகின்றான். தான் சூதினால் வென்ற 'பெருமையைச் சூதுபோர்ச் சருக்கத்தில்,

தண்ணிய தருமன் செய்த
பாவமோ சகுனி செய்த
புண்ணிய நெறியோ வந்தப்
பொதுமகள் யாக சாலே
நண்ணிய தவறோ...............

என்று சிறிதேனும் கூச்சமில்லாமல், பறையடித்துக் கொள்கின்றான். இவ்வாறு சிறிதேனும் கூச்சம் என்பதில்லாததற்குக் காரணமாவது இவனுக்கு ஆன்மசிந்தனையென்பது சற்றேனும் இல்லாமையே. பாரத நாடகத்தில் இவனதுபாகம் தீமையின் உருவமாய்த் திகழ்வதேயன்றோ? இவ்வாறே, இராமாயணத்தில் இராவணனும், மில்டன் (John Milton) என்னும் மகாகவியின் 'சுவர்க்க நீக்கம்' (Paradise Lost) என்ற காவியத்தில் சாத்தனும் (Satan), மற்றும்பல காவியங்களில்வரும் பலரும் தீமையின்உருவங்களாவார். ஆயினும், அவர்களெவருக்கும் ஆன்மசிந்தனையென்பது சிறிதேனும் இல்லாமல் போகவில்லை. அது சிறிதிருப்பதாற்றான் இராவணன், "நாசம்வந் துற்ற காலே நல்லதோர் பகையைப் பெற்றேன்" என்று தன் பகைவனது திறத்தை அறிகிறான். "மூத்தது கொள்கை போலாம் இராவணன் வாழ்ந்தவாழ்க்கை" என உண்மையை யுணரலாகின்றான். 'கடன்கொண்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்னும்படி கலங்கலுற்றான். "அவ னன்னது கண்டானிவன் ஆரோவொன வயிர்த்தான்"என அயிர்க்கின்றான். மேலும் சானகியின்காதலால் தனக்கழிவு நிச்சயம் என்பதையும் ஒருவாறு அறிந்து "அறந்தரும் செல்வ மன்னீர்! அமிழ்தினு மினியீர்!என்னைப் பிறந்திலனுக்க வந்தீர்"........என்பான் அவன். இவைகளில் காணப்படும் அயிர்ப்பு மயக்கம், பாதியுண்மை யுணர்தல்முதலான சிந்தனைக்குரிய பண்புகள் எதுவும் சுயோதனனுக்கு இல்லை. இவனுக்கு இதயமே யில்லை என்றுகூடக் கூறிவிடலாம். அதனால்தான் இவனுக்குக்காதல் என்பதும் இல்லை; வீரமும் இல்லை. இவ்வாறு தனது செய்கையாற்றல் செலவழியக்கூடிய ஆன்மசிந்தனைவீரம் காதல்முதலிய புழைகளெல்லாம் அடைபடவே, அவ்வாற்றல் முழுதும் அரசியலில் சென்றுவிட்டது. அதனால், எந்திரமனைய வாழ்க்கையாகவே இச்சுயோதனது பசையற்ற வாழ்க்கை முடிந்தது †. இத்தகையோன் பகைவர்க்கு எவ்வாறு சிறிதேனும் தண்ணளி காட்டுவான்?

மேலே சுயோதனன் அவ்வாறு கழறியதும், கண்ணன், தொனியும் பொருளும் வாய்ந்த ஒருமொழி யாற்றுகின்றார்:—

தந்தை காதலுறு தன்மை கண்டிளைய
தாய்ப யந்தவிரு தம்பியர்க்
கிந்த வாழ்வும ரசுங்கொ டுத்தவனும்
நின்குலத்தொருவ னிங்குளான்
மூந்த மாநில மனைத்தி னுக்குமுயர்
முறைமை யானுரிய வரசருக்
கைந்து மாநக ரும்நீகொ டாதொழியி
லென்ன தாகுமுன தரசியல் ?

இவ்வரிய உரையினால் கண்ணபிரான், சபையோரெல்லோரையும் ஒரு மோகத்தில் ஆழ்த்திவிட்டார். 'ஆகா! இவ்வளவழகாகவும் கம்பீரமாகவும் உதாரணம் காட்டி, உத்தமரைப்போற்றி யுரைசெய்த இம் மோகத்தில் அகப்படாதவன் ஒரு மனிதனோ! என்று அச்சபையினில் இருந்தவர் அனைவரும் வியந்தனர். உண்மையில், பெரியானொருவனைப் பல்லோர்முன் போற்றுவதினும் மாண்புடைய தோற்றமொன்றில்லை. "உரம்பெற்ற மலர்க்கமலம் உலகளந்த சேவடிபோலுயர்ந்துகாட்ட, அதனைக்கண்டு வண்டுபாட, வரம்புற்ற கதிர்ச்செந்நெல் தாள்சாய்ந்து தலைவணங்கும் தண்ணரங்கமே" என்று பெரியோர்வருணித்திருக்குமியற்கைக்காட்சிக்கே ஒப்பிடத்தகுந்த அழகுவாய்ந்தது இந்தத் தோற்றம். இவ்வழகினைச் சற்றே நின்று பருகுமின்!

ஆனால் அவ்வழகுகளெல்லாம் அப்பாட்டிலுள்ள ஒரு பேருண்மையை மறைத்தல் ஆகாது. மூத்தபாட்டன் ஒரு பெரிய தியாகியாகவும், பேரன் அக்கிரமத்தின் குஞ்சலமாகவும் அமைந்த வமிசக்ஷீணம் ஒரு சரித்திர உண்மை. இவ்வியாசத்தின்முதலில்முகலாய இராஜ்யத்தின் பெருமையைக் குறிப்பிட்டேனல்லவோ? அச்சரித்திரத்தைக் கற்று அச்சோபை பூத்த கண்களால் இப்பாரதத்தை நோக்கின் அவ்வுண்மை தெளியவரும். தன்உடன்பிறந்தாருக்காக எவ்வளவு அன்பும் ஆதரவும் பெருகியவன் ஹுமாயூன்? தன் தனயனுக்காக உயிரை ஈந்தவள்ளல் அன்றோ பாபர். இப்படிச் சிறந்த மூதாதையரையுடைய இதே வமிசமே, பின்னால் தனயனைப் பொட்டையடித்த ஜிஹாங்கீரையும், தகப்பனைச் சிறையில்இட்டுச் சகோதரர்களைக் கொலைசெய்த அவுரங்கசீப்பையும் விளைவித்ததென்றால்,அதில் விளங்கும் குலநாசம், தந்தை காதலுக்காக வாழ்க்கையின்பத்தைத் துறந்துநின்ற ஒரு பாட்டனதுபேரன் இவன் தீமையின் உருவமாய்த் திகழ்ந்த குலவழியை ஒக்குமன்றோ? அத்தகைய குலநாசம் † தன்கண்முன் நேராவண்ணம் காக்கவேண்டுமென்னு மொரு கருத்தினை வீடுமனுக்குப் புகட்டவேண்டியே இவ்வாறு கூறினார் கண்ணன். ஆயினும், "இவ்வுலக வாழ்க்கையைத் தரிக்கிலேன்"என்று கடலில் ஒருவன் விழுவானாயின், அதனால் இயற்கையில் ஒருவிதமாறுதலுமில்லாமல் தண்ணீர்சிறிதுசப்தித்து மூடிமுன்இருந்தபடியே முடிந்துவிடுதுபோல,கண்ணனது சொல்லும் வீடுமனது அகத்தினின்றும் ஒரு நெட்டுயிர்ப்பினைக்கிளப்பி அத்துடன் நின்றது. நின்றதெனினும் அக்கருத்து அத்துடன் இறந்துபோகவில்லை. வீடுமன் போர்க்களத்தில் பட்டபோது அக்கருத்து அவனுள்ளத்தில் தோல்வியையும் துயரத்தையும் நிரப்ப,

உழுதவாளி யுருவ உங்கண் முன்னர் வீழ்ந்தேன்
பழுதொன்றிலை இதுவென் பவத்தால் பிறந்தது

என்று, தன் வமிசம்முற்றும் நாசமுறுமுன் தானே பட்டதைப் பற்றிச் சிறிது ஆறுதலடைகின்றான்.

மேலேகூறியதைத் தொடர்ந்து கண்ணபிரான்பின்னும் மொழிவார்:—

ஒருகு லத்தினி லிரண்டு மன்னவர்
உடன்பிறந் துரிமை யெய்தினல்
இருகு லத்தவரும் ஒக்க வாழ்வுற
லெக்கு லத்தினும் இயற்கையே
பொருகு லக்களிறு வளர்திசைக் கண்மிகு
புகழ்ப ரப்பியெழு புவிபெறுங்
குருகு லத்தவ ரியற்கை நன்றென
மொழிந்த னன்கரிய கோவலன்.

'ஒரு குலத்தினில் இரண்டு மன்னவர் பிறந்தனர்' என்று மழுப்புகிறார் கண்ணன். 'அன்னையானவ ரிருவராம், தந்தையரைவராம், இவர்களும் என் உடன்பிறப்புஆவார்களோ' என்று இதனைப் பின்னால் மறுத்துக்கூறுவான் துரியோதனன். ஆனால் இங்கு, இரண்டொருவார்த்தை பேசிவிட்டுக் கண்ணனைச் சடுதியில் வெளியேற்றிவிடுவதில் கருத்தாயிருந்த சுயோதனன் அவ்வாறொன்றும் வாதிக்காமல், விழி தீயெனும்படி செயிர்த்து மிகுந்த செருக்குடன் கூறுகிறான்.

பேர ரானிருபன் மணிநெடுஞ் சுடிகை
ஆயி ரங்கொடு பொறுத்தபார்
வீர ரானவ ரதல்லவோ உரிமை ¶
வேண்டு மோவென விளம்பினான்

என்று அப்பெரிய அரச சபையில் அமைச்சர் புடைசூழ, செழுமதிக்குடைக்கீழ் மார்பைநெறித்துத் தன் வலக்கை நீட்டி, கண்ணனைப்பார்க்காமல் நேராக நோக்கி, தம்பியரும், தமரும் பலக்கட்டும் சூழ்ந்துநிற்கக்

பேர ரானிருபன் மணிநெடுஞ் சுடிகை
ஆயி ரங்கொடு பொறுத்தபார்

என்று கர்ஜித்த இதே சந்தக் குறிப்பில், கங்கைமகன் முதலாகக் காந்தாரர்முடிவாக யாவரும் இறந்தகல, தனது முடிசிதறிப் பகைவன் தன்மேல் வஞ்சினம் தீர்த்த காலை, இதே முராரியை,

மலைத்த போர்தொறு மெனக்குநீ செய்பிழை
மற்று ளோர்செய நினைப்பரோ
குலத்தி லேயிழி குலத்த ரானவர்
குறிப்பி லாதிவை பிறக்குமோ
சலத்தி னல்வினை யியற்று வார்முடி
தரித்த மன்னவரொ டொப்பரோ
நிலைத்த வாழ்வ வற்கினிக்கொடாய்
நினைத்த காரிய முடித்தியே

என்னக் கூறுகின்றான். அம்மாதிரியே துச்சாதனன் மாதைப் பிடித்திழுத்த,

வழக்கால் வென்றோம் வருவாயே

என்னும் அந்தச் சந்தக்குறிப்பிலேயே வீமனது பழி முடிக்கும் கூற்றும்,

இன்றே யுன்றன் சென்னிதுணித்
திழிசெம் புனலில் குளித்திடுநாள்
இன்றே யழலி னுற்பவித்தாள்
இருளா ரளக முடித்திடுநாள்.

என நிகழ்தல் காண்க.

வீரரானவர்க்கு உரியது இவ்வுலகமென்று அவன் இயம்புதலும், மேலே கண்ணன் கூறுகின்றார்.

பொய்வ ளர்ந்தமொழி மன்னன் மற்றிவை
புகன்ற பின்புபுய வலியினால்
ஐவர் தங்களர சுங்கொடா மலடல்
ஆண்மை கொண்டெதிர் அடர்த்தியேல்
மெய்வி ளங்கவரு குருநி லத்தினிடை
வந்து வெஞ்சமர் விளைக்கவே
கைவ ழங்குகென நின்ற தூணிடை
அறைந்து ரைக்குமிவை காவலன்.

(தர்மக்ஷேத்ரம் குருக்ஷேத்ரம் என்பதே (சத்தியம்=தருமம்)மெய் விளங்கவரு குருநிலமென இங்கு மொழிபெயர்க்கப்பட்டது.)

எம்பிரான் இவ்வாறு விட்டுரைத்ததும் சுயோதனன் வைதவசைகளைப் பார்க்குங்கால், ஒரு உண்மை தெளியவரும். மற்றைப்பாசுரங்களில் கூறியதுபோல் கண்ணன் சபைக்கு வரும்போதே வசவுடனே தொடங்கி யிருந்தால், வைவதில் சுயோதனன் சிறிதும் இளைத்தவ னல்லனாதலின், அச்சொற்போரில் ஒருவரும் வெற்றியுடன் வெளியேற முடியாது. துரியோதனனது சபையின் எழில் சிதையுமெனினும், கண்ணனும் சிறிது சேற்றைப் பூசிக்கொள்ளவே நேர்ந்திருக்கும். ஆனால் கண்ணன் சிறிதும் சலிப்பதின்றி யதார்த்தமே பேசுவாராக அவரைத் துரியோதனன் வைதானெனின் அவன்சபையின் சிறப்பு அழியுமேயன்றிக் கண்ணனுக் கொன்றும் குறைவில்லை.

இருக்குமெழி லவைக்கேற்ப மொழியாமல்
தன்மதத்தால் இயம்பு கின்ற
அரக்கிமக னுடனென்றும் கழறேன்மின்

என்று பின்னுள்கூறிய அச்சுயோதனன் இப்பொழுதென்னே தனது சபையை வசைச்சொல் சபையாக மாற்றிக்கொண்டது. ஆதலின் அவனது அரசவையின் போலிச் சிறப்புக் கெடவும், கண்ணன் அவ்வசவுச்சேற்றிலிழியாமல் நகையுடன் வெளியேறியதை,

சீலம ற்றவர் சினத்த போதுமொரு
தீதி லாதவர் செயிர்ப்பரோ

என்று மிகத்தெளிவாக நமதுகவிஞர்வில்லிபுத்தூரர் கூறுகின்றனர்.

† இந்திரசித்தன் பொற்றேருள் இற்றிடைவீழ்ந்ததென்றால் எந்திரமனைய வாழ்க்கை இனிச்சில ருகந்தென் என்றார். என்று தான் சிருட்டித்த கதாபாத்திரத்தில்மேல் காதல் கொண்டு புலம்புகின்றார் கவியரசர். ஆனால்'எந்திரமனைய வாழ்க்கை என்பதில் அவர்மனத்தில்கொண்டது,இந்திரசித்திற்கு இதயமில்லை யென்பதன்று. 'எம்பியோ தேய்ந்தான், எந்தை புகழன்றோ தேய்ந்தது'என்றெல்லாம் கழறிய இந்திரசித்தனது அழகியஉள்ளத்தைமறுத்தாரில்லை. அவனது சலனமும் பொலிவும், அதிர்ச்சியுமே, எந்திரத்திற்கு ஒப்பிடப்பட்டனவேயன்றிப்பிரிதன்று.மற்று நான் இங்குத் துரியோதனனைப்பற்றி அப்பொருளில் கூறவில்லை. எந்திரத்தைப்போல் இதயமின்மைபற்றியே சுயோதனனது வாழ்க்கையை எந்திரமனைய வாழ்க்கையென்று கூறினேன்.

† இராஜபுதனத்தில் மீவார் அரசியாகிய கர்ணாவதியிடம் காதல்கொண்டு மீவாரை முற்றுகையிட்டுத் துன்புறுத்திய குஜராத்தேச அரசனொருவனைப் போரிட்டொழிக்கும் பெருந்தகைமையான எண்ணங்கொண்டேஹுமாயூன் தன்னுட்டினிலைமையையும் பொருட்படுத்தாமல் சென்றபயம் காத்த செய்திக்கும்,

அன்னநடை அரம்பைதனை அவுணர்கவர்ந்
திடஇமையோர் அரசுக்காக
முன்னமவ ருடன்பொருது சிறைமீட்டான்
நங்குலத்து முதல்வ னன்றோ

என நகுலன் கூறிய செய்திக்கும் ஒப்புமையுண்டு. இதனைத் தொடர்ந்து நகுலன்

மன்னவையில் யாம்காண மடவரலைத்
துகிலுரிந்த வலியோன் தன்பால்

என்று கூறியதிலுள்ள துகிலுரிந்த கொடுமைக்கும், ஹுமாயூனது பேரன் ஜிஹாங்கீர் நூர்ஜஹானது கணவனைக் கொன்றுஅவளைமணந்ததற்கும் ஒற்றுமை காணலாம். இப்படியாகப் பலவிதத்திலும் பாரதத்துக்கும் முகலாயசரித்திரத்திற்குமுள்ள ஒற்றுமைகளைப் பின் பாரத நிகழ்ச்சி என்னும் தலைப்பின்கீழ் ஆராய்வோம்.

¶ ஹோமர் (Homer) காதையிலுள்ள வீரனொருவனும் இவ்வணமே 'பார் வீரரானவரதல்லவோ, உரிமை வேண்டுமோ?' என்று விளம்புகிறான். தீய மன்னவரது நியாயம் உலகமனைத்தும் ஒன்றே போலும்.



9201

# காலத்தொனி

"The revolution which establishes cooperation and friendliness, not so much in the laws as the customs and habits of mind of man, will be the most permanently beneficial of all revolutions."

"We have to catch something of the vision of the sage, and artist and saint; and we have to embody their visions in the social order."

"Combat or death; bloody struggle or extinction; it is thus the question is irresistibly put."

தற்காலத்திய 'நாகரிகம்' என்பதுஒருபெரிய கபட நாடகம்போலும். அதன் முக்கியகுணுதிசயம்யாதெனின் மாயநடிப்பேயாம். "உள்ளொன்று நினைத்துப் புறமொன்று பேசும்" வேஷதாரிகளும், அகத்தில் ஒன்றைநாடிப் புறத்தில் அதற்குநேர் எதிரானதைப் பற்றித் தொடரும் பாசாங்கினரும் நிரம்பப் பெற்ற நிலையே இந்நாகரிகம் எனலாம். ஈசுவரபக்தி நிறைந்தவரென மிக முழங்கி, உண்மையில், சைத்தானுக்குத் தம் வாணாளைச் சமர்ப்பிப்பதும், சுதந்திரமே அரும் பெரும் பொக்கிஷமெனப் பேசி அச் சுதந்திர வியாபகத்தை முன்னிட்டு உழைப்பவர்களை அச்சுறுத்திச்சிறையிலிட்டுஅடக்குவதும், இராமனைப்புகழ்ந்து கொண்டே இராவணனுக்குத் தொண்டுசெய்வதும், அறநெறி தழுவி யொழுகலே வாழ்க்கையின் இலக்ஷியமெனக் கர்ஜித்து மறவழிபற்றி நடப்பதும், மணவாழ்க்கையின் நற்பயன்களையும் இல்லறத்தின்மாண்பையும் பற்றிப் பிரசங்கித்து, ஓயாமல் "காதல், காதல்" எனப் பிதற்றி, இழிய பாசவழியைத் தொடர்ந்து விபசாரத்தைப் பெருக்கி, இல்லத்தை பிடாரிகள் குடியேறிக் கூத்தாடும் சுடுகாடாகவும், கபடமும் நயவஞ்சகமும்பதுங்கிக்கிடக்கும் குகையாகவும்மாற்றுவதும், தர்மபுத்திரனின் சந்ததிகளெனக் கொக்கரித்துச் சகுனியின் ஊழியராகியே உஜ்ஜீவித்தலும், மனப்பயிற்சியையும்அகலத்தையும் கல்வியறிவையும் சிலாகித்து மௌட்டியத்தையும் முரட்டுத்தனத்தையுமே வளர்க்கக்கூடிய உபாயங்களை வெளிப்படுத்துவதும், சகோதரத்வத்தைப்பற்றி நீளநீளப் பிரசங்கித்து அயலவர்களையோ அடிமைப்படுத்துவதும், இணக்கமும் சமாதானமும் பரோபகார நினைவும் மாந்தரின் உயரிய சாதங்களாகுமெனப் பறையறைந்து பொறாமை செருக்கு பிணக்கம் கலகம் பேரவா புரட்சி யுத்தம் முதலானவைகளேசெழித்தற்கான பல்வேறு கருவிகளையும் சாதனங்களையும் ஓயாமல் கண்டுபிடித்து வருதலுமேதான் நாகரிகத்தின் நன்கொடைகளாகத் தோன்றுகின்றன! சுருக்கத்தில், பாவனையும் சொல்லும், இலக்ஷியமும் செயலும், ஒன்றோடொன்று இயைந்து விளங்காமல் முரணுற்று மாந்தரனைவரையும் அலப்புறுத்தி நெட்டுயிர்த்து மடியச்செய்கின்றன. தற்காலத்தில் வாழ்க்கையின்போக்கை நிர்மல மனத்துடன் ஊன்றிப்பார்ப்போமாயின், நம்முடைய இலக்ஷியங்களெல்லாம் வெறுங் கட்டுக்கதைகளாக முடிகின்றன! செயற்கைஉலகை யொட்டியவரையிலும் சீரிய கருத்துக்களும், அவைகள் மீது நமக்கு உள்ள நம்பிக்கையும், அவைகளைப்பற்றி நடத்துதற்கானசிரத்தையும் திடசித்தமும் நாளுக்குநாள்குறைவடைந்து வருகின்றன! இப்போதுபெரும்பாலரைப் பிடித்து வருத்துகின்ற துன்பங்களுக்கு மூலகாரணமாவது அந்நடிப்புக்களே போலும். சுயநலப்பற்றும் தற்புகழ்ச்சியும் அளவுகடந்து பரவவே வாழ்க்கையின்பம் குலைந்து, ஜீவப்போக்குஇழிந்து, அகவொளி மழுங்கி, ஆத்மானந்தம் சிதறிப்போகின்றது! மௌட்டியமும் மூர்க்கத்தனமும் மமதையும் பகட்டுமினுக்குகளும் செழிப்புற்று மானுடரைச் சூழ்ந்து சுருக்கிட்டு அழுத்திவருகின்றன! அந்தோ, இவ்விபரீத நிலைமையினின்று எப்பொழுது எவ்வாறு எழுவோமோ? கபடமாகிய உடையணிந்து யாவரையும் மயக்கியே உருட்டித் துயரு எழுத்திவரும் சூரனும் "நாகரிகன்" என்ற விசித்திரபிராணியின் ஆட்சிக்கு உட்பட்டு மக்கள்அனைவரும் பரிதபிக்கின்றனர்! நாளேற நாளேறக் கற்கின்ற முறைகளும் நூல்களும் கல்லூரிகளும் எண்ணற்றுப் பெருகிவருகின்றன; ஆயினும், மெய்விவேகமும் ஞானமும் ஓங்கிவளர்ந்துவியாபிப்பதைக் காணோம்! ராஜ்ய தந்திரங்களும், சமாஜ வாதங்களும், பிரகிருதி சாஸ்திரங்களும், சுகாதாரவழிகளும், ஔஷதங்களும் அபரிமிதமாக வளரினும், மிடியும் நோயும் இன்னும் இவைபோன்ற இடும்பைகள்பலவும் தம் பலங்குறைந்துவருவதாகத் தோன்றவில்லை!

ஜடப்பொருட்களைவிட மிக்க மேலானவை ஜீவன்களாகும்; அவைகளினும் நனிசிறந்து விளங்குவன மானுட ஜீவன்களாம். தீர்க்க விசாரிப்பு, பாரந்நோக்கம், பலதிற அநுபவங்களின் பலனானஞானமுதிர்ச்சியினால் பிரபஞ்சாதிகளின் ஒற்றுமையையும் போக்கையும் முடிவையும் சூக்ஷ்மத்தையும் தெளிவாக உணர்கின்ற ஆன்மாக்களே மாந்தருள் மாண்புற்றுத் திகழ்பவர்.

உலகாதிகளி லொவ்வொன்றும் ஏனையவைகளுக்குச்சார்பாகநின்றுபரஸ்பர இயைபுடனொரேமுடிவை நோக்கி இயங்குகின்ற தென்பதைப் பகுத்தறிதலும், சச்சிதானந்தப் பிழம்பின் பண்பைத் தன் மூலமாக நிரூபித்தலுமேதான் மானுட உருவத்தில் நடத்தும் இவ்வுலகவாழ்க்கையின் பயனும்.

அன்பினாலும் விவேகத்தினாலும் நிரப்பப்படாத கர்மம் வீணாகும்; ஆராய்ச்சியினாலும் விசாரிப்பினாலும் அநுபவத்தினாலும் துளக்கப்பட்டு உரம்பெற்றிராத பிரேமைகளும் கொள்கைளும் நானாவிதச் சந்தேகங்களை மூட்டுவித்துச்சஞ்சலங்களுக்குட்செலுத்தும்; அன்பினால் சீர்ப்படுத்தப்பட்டுப் பிரகாசிக்காத விவேகமானது பராமுக வுணர்ச்சிக்கும் மூர்க்கத்தனத்திற்கும் எதையும் ஏற்றுச் செய்தற்கான ஆர்வமின்மைக்கும் காரணமாகும்.

பல பலப் புத்தகப் படிப்பினின்றும், அதிநுட்ப தர்க்கத்தினின்றும், ஓய்வொழிவுக ளில்லாமல் ஊழியஞ் செய்வதினின்றுமேதான் ஞானம் ஊறிச் சுரக்கும்என்னுங் கூற்று அவலக்கூற்றாகும். உண்மையை அறியவேண்டுமென்ற ஆவலினாலும் விஷயாதிகளின் தாரதம்மியங்களைச் செவ்விதின் உணர்தல் வேண்டுமென்ற கருத்தினாலும் தூண்டப்பட்டவனுக்குத்தான் கல்வியும் ஆராய்ச்சியும் தர்க்க முறையும் கர்மமும்நற்றுணைகளாகநின்று அனுகூலஞ்செய்யக்கூடும்.

தேக ஆரோக்கியத்திற்கும், மனோ விசாலத்திற்கும், இதயத்தூய்மைக்கும் சமூகத்தினர்களின் பரஸ்பர அறிவிற்கும் இணக்கத்திற்மேதான் விக்ரஹாராதனையும், ஸ்தல யாத்திரையும், புராணப்படிப்பும், சாஸ்திரத்தேர்ச்சியும், நித்திய நைமித்திய கர்மானுஷ்டானங்களும் விதிக்கப்பட்டுள்ளன. இன்னவைகளெல்லாம் அந்தரான்மா வதிந்திருக்கும் அரணுட்செலுத்தும் வழிகள் போலும்; மூல வஸ்துவை நோக்கி உயர்த்தும் பலபடிகள் போலும். எனினும், அவைகள் மாத்திரம் வாழ்க்கையின் மெய் யாதர்சமுமல்ல; பலதிறப் பண்புகளுண்டத்தான மாந்தரனைவர்க்கும் சமமாகப் பொருந்துவனவு மல்ல; ஆனால், ஒவ்வொரு அங்கத்தினரின் மனவமைப்பிற்கும் அறிவின் வளர்ச்சிக்கும் தேவைக்கும் கருத்திற்குமானவாறு மாறும் இயல்புடையன. மற்று, மாற்றித்திருத்தி அப்பியசிக்கப்படு



வன. இவ்வுண்மையை அறிதலேதான் ஞானத்தின் குணாதிசயமாகும்.

தன்னறிவிற்கு எவ்வாறு தேகமும் மனமும் உதவுகின்றனவோ, அவ்வாறே மூலாதார வஸ்து ஞானத்திற்குத் தத்துவக் கற்பனைகளும் மதமும் மதாசாரங்களும் ஒருவாறு உதவுகின்றன. உறுதியும் ஒழுங்கும் இன்பமும் பயக்கும்பொருட்டுத் தேகவுறுப்புக்களையும் புலன்களையும் நம் மனத்தையும் நன்முயற்சிகளாலும் சுகாதாரவிதிகளை அனுசரிப்பதாலும் கல்வி கேள்விகளினாலும் உபயோகித்தல்போல், உயரவளர்ந்தர்ழ்ந்து பெருகும் மனோநிலைக் கேற்றவாறு மதத்தையும், மதவுறுப்புக்களான வர்ணாச்ரம விதிகளையும், நம் குலதர்மங்களையும் யாவருக்கும் நன்மைபயக்கக் கூடிய பல விதங்களில் நாம் திருத்தி உயர்த்தி மாற்ற வேண்டும்.

மக்களின் சுவபாவமும் ஒழுக்கமும், உலகாதிகளிற் பிறவற்றைப்போல், நாள் செல்லச்செல்ல மாசு அடைந்துவிடுகின்றன. அப்பொழுது, மலினங்களை நீக்கித் தளைகளை அவிழ்த்துத் தடைகளைத் தகர்த்து மாந்தரை மேலுயர்த்தப் பேரான்மாக்கள் முன்வருகின்றனர். உதாரணமாக, ஹிந்துஸ்தானத்தில், ஆதி வேதியர்களின் உன்னதக் கொள்கைகளும் நியமங்களும் கீழடைந்து, நரபலியும் ஜீவவதையும், இழிந்த ஆசாரங்களும், டம்பக்கிரியைகளும் பிரபலமாகவே, உபநிஷத்துக்கள் வெளியாயின. இதுபோலவே, காலச் சுழற்சியில், ஆறு தர்சனங்களும், புத்தரும், மகாவீரரும் பலசமயாசாரிகளும் தோன்றித்துராசாரங்களாலும் அவமதிப்பினாலும் மழுங்கிப்போய்ப் பதுங்கிக்கிடந்த சாச்வத உண்மைகளைப் பழம்பனுவல்களினின்று வெளிக்கொணர்ந்து அவ்வக் காலத்தினரின் மனோநிலைக்கும் சித்தத்தின் போக்கிற்கும் ஏற்றவாறு நூதன கற்பனைகளைச் சித்தாந்தப் படுத்தினர். காளாவர்த்தியில், அயல்நாட்டினர் ஒருவர்பின் ஒருவராகக்குடியேறிநம்முடைய சீர்சிறப்புக்களைக் குலைத்தழித்தாற்றான் அக்கற்பனைகளும்பொருளற்றஆசாரங்களாக இழிந்து போயின.

ஆறறிவு பெற்று விளங்குகின்ற மக்களனைவரும் பிறப்பையொட்டியவரையிலும்சம அந்தஸ்து வாய்ந்தவர்கள் ஆவர். ஒழுக்கத்தினால் மட்டுமே மனிதர்க்குள் உயர்வும் தாழ்வும் உண்டாவன. அவரவர் அறிவிற்கும் ஆற்றலுக்கும் தகுந்தபடிதான் அவ்வவர்க்குத் தொழிலும் அமைதல்வேண்டும்; மற்று, அமைகின்றது போலும். இதில் ஏற்றந் தாழ்வுகள் இல்லை. நம்முடைய சமய தத்வங்களின் மாட்சிமையையும், நாகரிகத்தின் சிறப்பையும், இலக்ஷியங்களின் உன்னதத்தையும்களங்கப்படுத்தி, சமதர்மவாழ்க்கையை அல்லோலகல்லோலப்படுத்தி மேலேறவிடா தழுத்தி, பிணக்கத்தையும் எளிமையையும் பெருக்கவல்லன எவையெனின், வர்ணாச்ரமதர்மங்களின்மெய்ப்பொருளை அறியாமையும், மதங்களில் அடங்கியிருக்கும் நித்தியநிரந்தர மெய்ம்மொழிகளையும்ஆசாரங்களின் நன்மைதீமைகளையும் பகுத்துணராமையுமே யாம்.

ஆண் பெண் மக்களுள் இயற்கைப்பாகுபாடுமட்டுமுளது; ஏனைய பேதகங்கள் அனைத்தும்மூடமூர்க்கக் கற்பனைகளேயாம். சரித்திரங்களைப் படித்தறிவோமாயின், வீரதீரச் செயல்களிலும், கல்விப்பயிற்சியிலும் புத்திவளப்பத்திலும் பெண்பாலர் ஆண்மக்களுக்குச் சிறிதேனும் இளைத்தவர்க ளல்லரென்பது புலனாகும். ஒற்றுமை உணர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும், தியாகசிந்தனையின் செழிப்பினிற்கும் வியாபகத்திற்கும், சமூகக்கிளர்ச்சிக்கும், நாகரிகஎழுச்சிக்கும்பெருக்கத்திற்குந் தூண்டுகோலாகவும் பக்கபலமாகவும் விளங்குபவளும், தேய்ந்து மறைந்துவிடாமலும் இன்னலிடர்களுக்கிலக்காகி ஏங்கிச் சிறுகிக் குறுகாமலும் வாழ்க்கைப் பெருமையைப் பாதுகாப்பவளும், பாதுகாக்கக் கூடியவளும், பெண்ணேயாம்.

இம்மானுட வாழ்க்கையின் நோக்கம் யாதெனின், சுகஜீவனம் நடத்துவதன்று; இன்பமும் அன்பும் நிரம்பப்பெறுதலே யாம். மானுடன் மெய்யாக விரும்புவனவும் விரும்பவேண்டியனவும் எவை யெனில், ஓய்வும் அமைதியுமல்ல, மற்று ஊக்கமும் வீரமுமேயாம். பொருளின்குவியலும் தன்னலப் பற்றும் அடிமைத்தனமு மல்ல; மற்று, கடுமையாக உழைக்கவேண்டியிருப்பினும், வலி வருத்தம் ஏக்கம் தோல்விகளுக்கிலக்காகித் துடிக்கநேரிடலாயினும், தேகஅயர்ச்சியும் மனப்புழுக்கமும், புத்தி மயக்கமும் அதைரியமும் சூழ்ந்தபோதிலும், சுயமுயற்சியினாலும் சுய விசாரிப்பினாலும் உண்மையை யறிந்து கடைப்பிடித்து ஒழுக வேண்டுமென்ற ஆவலையும் சுதந்திர தாகத்தையும் ஒருவனும் எக்காரணத்தையிட்டும்கைவிடக்கூடாது.

ஆசாபாசங்களுக்கு ஆளாகியஒரு அடிமைத்தனம் என்ற நச்சுப்பூண்டின் ரசத்தைப் பருகி மயங்கி உழலும் மைந்தர்காள், மாதர்காள், எழுமின்! உலகம் ஓங்கிட உழைமின்! வாலிபர்களே, அச்சவுணர்ச்சியைப் பொசுக்கி, சொன்னபடிக்கு உடலும் மனமும் இயங்கப் பயிற்சிசெய்து, முடிசற்றுங் கூம்புதலின்றி நல்ல கோபுரம்போல நிமிர்ந்த நிலையுறச் செய்யும் பாவனையைப் பெருக்கிப் பலப்படுத்தி, வீண் வீம்புகளைப் போக்கி வம்புகளை விடுத்து, புயங்களைப் பருக்கச்செய்து உடலின் உறுதிபெற்றுக் கல்விவளர்த்து வித்தைகள் பல கற்றுச் சித்தந் தெளிந்து சஞ்சலம் நீங்கி, அச்சமாகிய பிசாசைத் திருகி எறிந்து, தாமஸப்பேயைத் தாக்கி நசுக்கி, அடிமைத்தன மென்ற பாம்பைக் கொன்று மடித்திட்டு உயர்மின்!

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மன்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
குமார் 300 போலிகள் ஏமாற்றும்.
சோரோஜனா மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
ஸ்யாவனப்ராச
சிறந்த டானிக்
சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
காஸ்டராலகஸ்
ஜ்வரேக்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

## வர்த்தமானம்

சீமையில் கைராட்டினம்:— சஸெக்ஸ் என்னு மிடத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி ரெக்ஸ் எய்ட் கின்ஸ் என்னும் மாது ஒரு புதிய கைத்தொழிலை ஆரம்பித்து நடத்தி வருகிறார். அவர் ஆடுகளின் ரோமங்களைக் கொண்டு கைத்தறியால் வேலை செய்து கம்பளங்களை செய்கிறார். அவர் முப்பது ஆட்களை வேலைக்கு வைத்துக்கொண்டு ராட்டினத்தால் நூற்கவும், கைத்தறியால் நெய்யவும் செய்கிறார். அத்துணி பழைய முறையில் உற்பத்தியாவதைக் கண்டு பலரும் அதை வாங்குகின்றனர்.

* * *

ரேடியோ மூலம் நோய்க்குச் சிகிச்சை:—லண்டனில் நோயாளிக்கு சௌகரியமாகவும் சீக்கிரமாகவும் ரேடியோ மூலம் சிகிச்சை செய்து வருகின்றார்களாம். சில முக்கியமான இடங்களில் சுகாதார விடுதிகள் ஏற்படுத்தி ரேடியோக் கருவிகளை இந்த விடுதிகளுக்கு இணைத்துள்ளார்கள். இந்தச் சுகாதார விடுதிகளிலிருந்து கம்பியில்லாத் தந்தி மூலம் நோயாளிகளுக்குச் சுகாதார அதிகாரிகள் செயற்கைக் காய்ச்சலை உண்டுபண்ணி நோயைத் தவிர்த்துவருகிறார்கள். நோயாளிகள் வீட்டிலிருந்தே இந்தச் சிகிச்சைகளையும் நோயைத் தடுக்கும் முறைகளையும் பெற ஏதுவாயிருக்கின்றது.

இண்டோ-கம்மர்ஷியல்
பாங்க், லிமிடெட்.
மாயவரம்
சென்னை ஆபீஸ், 107: அரண்மனைக்காரத் தெரு,
பஜார் பிராஞ்சு, 260. சைனபஜார் ரோட்,
மதுரை, காரைக்குடி, விருதுநகர்,
கும்பகோணம், திருவாரூர்,
ஈரோடு, தூத்துக்குடி,
விஜயநகரம்,
புதுக்கோட்டை,
திருநெல்வேலி.
சப்-ஆபீஸ்
சீர்காழி & சிதம்பரம்
எல்லா வகையான பாங்கி அலுவல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். நிபந்தனைகள் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.
S. N. N. சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்,
107. அரண்மனைக்கார தெரு, ஜி, டி.. மதறாஸ்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
1933 Results.
New Business Completed
exceeds ... ... Rs. 1,67,00,000
The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.
Specialities.
Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.
For agencies please apply to:—
Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*
Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.
A sound Company.
Please apply for particulars to:—
Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

சிறந்த பலவிருத்தி ஔஷதம்
சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1
இனும்! "காம சாஸ்திரம்" இனும்!!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.
ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ஞ ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்த இன்வெஸ்ட்மெண்டும், வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்டமுடையதும் ஆன கம்பனி.
ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை அல்லது இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்
இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

Printed at the B. N. Press, Mount Road, and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)